ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. No. M. 4642.



# திராவிடநாடு

மலர் 3.] 7-1-45 [இதழ் 42.

## எதற்கும் மேல்

(ஸ்யாமேணசுக என்ற கிருதிமெட்டு.)

பல்லவி.

தமிழ் நாடுதான் மேலான நாடு
தமிழர்க்கெலாம் மற்றவை காடு

அனுபல்லவி.

கமழ்தென்றலே நடமாடுநாடு
காவிரி நீள்வைகை பாயும்நாடு

சரணம்.

கன்னல் மா பலாவும் வாழை கமுகு
செங்கெல்யாவுமே மலிகின்ற நாடு
பொன்னின் வார்ப்படம் போல்மாதரோடு
போர்புரி மாவீரர் வாழும் நாடு (த)

பாரதிதாசன்.

# சைவத்திற்குச் சப்பைக்கட்டு.

ஈழத்தடிகள். பி. ஏ.

இனிச், சைவசமயத்திற்குப் புத்துயிர் அளிக்கவந்த சம்பந்தருக்கு, அவருடைய மூன்றுவ தாண்டு நிரம்புவதற்குள்ளாகவே; நான்குபெயர்கள் சூட்டப்பட்டுவிட்டன. சிவபாதவிருதயருக்குப்பிறந்த சம்பந்தர், முதலில் பிள்ளையெனவும் அழைக்கப்பட்டுப், பின்னர் பிள்ளையாராய்-ஆளுடைய பிள்ளையாராய் - ஞானசம்பந்தரானார். சம்பந்தரின் ஆயுட்காலம் பதினாறு ஆண்டுகள். அதுபோலவே, அவருக்குப் பெயர்களும் பதினாறு உண்டு. அதாவது மேலே சொல்லப்பட்ட நாலு பெயர்களோடு இன்னும் பன்னிரண்டு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒருபெயர் ஒரு வடிவம் ஒன்றுமில்லாத சிவனுக்குஆயிரம் திருப்பெயர் சூட்டி அழைக்கப்படும் போது, அவரது பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டவந்த சம்பந்தருக்குப் பதினாறு பெயர்கள் இருந்ததில்வியப்பொன்றுமில்லை. ஒரு சமயத்திற்குத் தலைவனாகவுள்ள கடவுளுக்குப் பெயர்கள் ஆயிரக்கணக்கில் இருப்பதும், அச்சமயத்தை விளக்கவந்த ஆசிரியன்மாருக்கும் ஒன்றுக்கு மேற்பட்டபல பெயர்கள் இருப்பதும் எதனைக்காட்டுகின்றது? அச்சமயம் வெறும் போலிஎன்பதையே காட்டுகின்றது. எப்படியென்றால், சைவம் என்ற பெயரால் அழைக்கப்படும் சமயத்திற்குக் கூட நூற்றுக்கணக்கான பெயர்கள் உண்டு. ஆதிசைவம் -அநாதிசைவம்- அவாந்தரசைவம் -அபிக்கவாதசைவம்- என்றும்; அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம் என்றும்; பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், சத்தப்பிரமவாதம், கிரீடாப்பிரமவாதம், பாற்காரியவாதம், மாயாவாதம் என்றுசொல்லப்படும் பிரிவுகளும், இன்னும் இதற்கு மேற்பட்ட பலநூற்றுக்கணக்கான பிரிவுகளும் இச்சொல்லப்படும் சைவத்திற்குள் அடங்கியிருப்பனவேயாகும்.

ஒருபொய்யை மறைக்கஒன்பதுபொய் என்பதுபோல, இயற்கைக்கும் அறிவுக்கும் மாருகக், கடவுள்உண்மையை நிலைநாட்டவந்தவர்களால், அவ்வுண்மைக்குக் கூறப்பட்ட காரணங்கள் அறிவுடையோரால் அவ்வப்போது மறுக்கப்படவே, பெயரை மாற்றிக்கடவுளுண்மையைநிலைநாட்டவும், பெயரைமாற்றிச் சமயஉண்மையைநிலைநாட்டவும், பெயரைமாற்றிச் சமயாசிரியர்களின் புகழை நிலைநாட்டவும் முயன்றனர். இம்முயற்சியின் தோல்வியே, இந்நாட்டில், பலசமயங்களும், பலகடவுளரும், பலசமயாசிரியர்களும் தோன்றவும் இடம்பெறவும் காரணமாக இருந்தது. உண்மையான ஒருகடவுளும், உண்மையான ஒருசமயமும், உண்மையான ஒரு சமயாசிரியனும் இருந்திருந்தால், ஊருக்கொரு கடவுளும், தெருவுக்கொரு சமயமும், வீட்டுக்கொரு சமயாசிரியனும் ஆளுக்கொரு கொள்கையும் இந்நாட்டில், ஏன், இவ்வுலகிலேயே தோன்றியிருக்கமுடியாது. கடவுள்-சமயம் ஆகியவற்றில் என்றைக்குப்போட்டியும் பூசலும் உண்டாயிற்றோ, அன்றிருந்தே அவை பொய் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுவந்தது-வருகின்றது. ஆனால் இந்தஉறுதிப்பாட்டுக்கு இவ்வளவுகாலமாக ஏன் ஒரு கட்டுப்பாடும் வரம்பும் இல்லாமற்போயிற்றென்று சிலர் கேட்கலாம். ஆம், உண்மைதான். உலகில்நடைபெறும் பலவகை வியாபாரம்போலவே, கடவுட்கொள்கையையும் ஒரு வியாபாரமாக வைத்து வயிறுநிரப்பும்ஒருகூட்டம், பொய்யை மெய்யாகக்காட்டும் புனிதத் துறையில் கைதேர்ந்தவர்களாய்இருப்பதால், உண்மையின் உறுதிப்பாட்டுக்கு வரம்புபோட முடியாது போகின்றது. மற்றவியாபாரங்களைவிடக் கடவுள் வியாபாரத்திலேயே போட்டிஅதிகம். மற்றவியாபாரங்களில் எல்லாம், துணி (ஜவுளி)க்கடை வீதி, மளிகைக்கடை வீதி, இரும்புக்கடைவீதி, மருந்துக்கடைவீதி என்று தனித்தனி இருக்கும். ஆனால் கடவுள்வியாபாரக் கடைகள் அப்படித் தனித்தனியாக அமைக்கப்பட்டிருப்பதில்லை. ஒருதெருவிலேயே பலகடவுளர் விற்பனைசெய்யப்படுவர். ஒருகடையில் சிவனும், இன்னொருகடையில் திருமாலும், பிறிதொருகடையில் கிறித்துவும், மற்றொருகடையில் அல்லாவும், இன்னும் பல கடைகளில் பலதிறப்பட்ட கடவுளருமாக ஒரே தெருவில் பலமான போட்டிகளுக்கிடையே இத்தனை கடவுளரும் விற்பனைசெய்யப்படுவர். நேற்றுச் சிவ விற்பனைநடந்த கடையில் இன்று அல்லா விற்பனை நடக்கும். துணிமுதலான வியாபாரப்பொருள்களில் பலதினுசுகள்இருப்பதுபோலக் கடவுளரிலும் பலதினுசான கடவுளர் இருப்பதால், கடவுளரும்தினுசுவாரி மதிப்பிடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றனர். இதனால் நேற்றுச்சைவனாக இருந்தவன் இன்று முசிலீமாகக் காட்சியளிக்கிறான். இப்படியே ஒவ்வொரு சமயத்தவனுக்கும்தான் கைக்கொண்டிருந்த சமயத்தைவிட்டு வேறு சமயம் புகும்நிலைமை அவ்வப்போது ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஒரு பொருளை விற்பனை செய்பவனுடைய திறமையைப்பொறுத்தே வாங்குபவனுக்கு அதில் விருப்பம் உண்டாகிறது. இன்று, நல்லபொருள் என்று கருதப்பட்டு வாங்கியபொருள், நாளை, கெட்டதென்றும், தெரியாமல் நம்பி ஏமாந்து வாங்கிவிட்டேன் என்றும் கருதக்கூடிய நிலைமையைப் பக்கத்துக் கடைக்காரன் உண்டாக்கிவிடுவதும் உண்டு. நேற்றுச் சைவனாய் இருந்து, இன்று முசிலீமாகிய ஒருவன்-நாளைகிறித்தவனாகின்றான். இந்த மாற்றம் வியாபாரிகளின் திறமை-திறமையின்மையைப் பொறுத்தே நிகழ்கின்றது.

இனியொரு சாரார், இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதுபோல், தான்கைக்கொண்டிருந்த சமயத்தைக் கைவிட்டு வேறொரு சமயம் புகுவதும், பின்னர் புகுந்தசமயம், விட்டுவந்த சமயத்தைப் பார்க்கிலும் தாழ்ந்ததென்று கருதி, விட்டதைத் திரும்பவந்துபிடிப்பதுமாக ஊசலாடிக்கொண்டிருப்பர். தோழர்காந்தியாரின் புதல்வர்களில் ஒருவர் இதிற் கைதேர்ந்தவர். அவர் ஒருஇந்துவாய்இருந்து முசிலீமாகிமீண்டும் இந்துவானவர். இனி என்னுவாரோ நாமறியோம். இந்தவிதமாகக் கடவுள்-மதம் ஆகியவற்றின் வியாபாரத்தில், விலை ஏற்றமும் இறக்கமும், சரக்கில் மாற்றமும், அதைவாங்குவதில்-விற்பதில் ஏமாற்றமும், இதனால் ஒருவருக்கொருவர் சீற்றமும் உண்டாவதை நாம் அடிக்கடி காண்கின்றோம். மதப் பூசல்காரணமாக மண்டை யுடைபட்டு வழக்கு மன்றம் ஏறியவர்களின் வரலாறுகள் பல நமக்குத்தெரியும்.

"எப்பொருள் யார் யார்
வாய்க்கேட்பினும்,
அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பதறிவு"

என்றஅறிவுக்குறளைப்பாடியவர்பிறந்த நாட்டில்தான்-அறிவே தெய்வம் என்று ஆணையிட்டுக்கூறியவர் பிறந்த நாட்டில்தான்-நட்டகல்லைத் தெய்வம் என்று கூறாதே என்ற நாவன்மையும் நெஞ்சுறுதியும் கொண்டவர் பிறந்தநாட்டில்தான் ஆறுமுகநாவலரும் அருட்பெருஞ்சோதி இராமலிங்கரும் 'அருட்பா-மருட்பா'ப் போரில் இறங்கிமுறைமன்றம் (கோர்ட்) ஏறிச் சைவத்திற்கு உயர்வுதேட முயன்றனர். அன்பே சிவம் என்று கூறப்பட்ட சமயம் யாதோ, அச்சமயத்திற்கு உயிர்பிச்சை அளிக்க வந்த சமயாசிரியர் நால்வர் அன்புமேலீட்டால் பாடிய தேவார திருவாசகங்களுக்கும்; சைவசமயமே சமரசசுத்த சன்மார்க்கம்என்றகூறியஇராமலிங்கர் சிவனிடம்கொண்ட அன்புப் பெருக்கின் காரணமாகப் பாடிய அருட்பாவுக்குமே உயர்வுதாழ்வுகாண முயன்றனர் என்றால், சைவத்தின் அடிப்படைக் கொள்கை எவ்வளவு மோசமாக இருந்திருக்கவேண்டுமென்பதை எண்ணிப்பாருங்கள், அன்பர்களே.

சிவனிடத்து அன்புகொண்டவர்கள் தங்கள் அன்பையே அளவுகோலாகக் கொண்டு—தங்கள் ஆற்றல்முழுவதையும் பயன்படுத்திச் சிவனைப்பாடியுள்ளார்கள் என்பதைஅறிந்துகொள்ளமுடியாத நிலை

(11-ம் பக்கம் பார்க்க)

# சிங்கத்தின் பங்கம்!

பரதன்.

நெஞ்சில் ஈரமற்ற,நன்றியற்றபதவிக்கும்பலிடமிருந்து கட்சியைமாற்றி அதைத்திராவிடச்சமுதாயத்தில்புரட்சிகரமானகாரியத்தைச்செய்வதற்கேற்றகருவியாக்க ஓர் முயற்சி 2-2-36ல் பெரியார் இராமசாமி அவர்களும்தோழர்சௌந்தரபாண்டியனும்விடுத்தஓர் அறிக்கையில்காணப்படுகிறது அதைஆதரித்து "இப்பதுமுயற்சியில் நம்மாலானதொண்டும், நம்மாலானஊழியமும் செய்யத்தயாராயிருக்கிறோமென்பதைநாமும்தெரிவித்துக்கொள்கிறோம்." என்று "நகரதூதன்" ஆசிரியர் கூறியிருக்கிறார். அந்தநன்மதி அவர் எட்டிலே பேனாவைத்தீட்டும் தங்களுக்கு ஏன்ஏற்படவில்லை? பட்டம்பதவிகளைவிட்டுவிடவேண்டுமென்று சேலத்திலே செய்ததீர்மானம்செந்தேள்என்றுபயப்படும், செயல்வேறு, சொல்வேறுபடைத்தசிலர்களுடன்கூட்டுவாழ்க்கைநடத்த உம்மால்முடியாது—உம்முடைய இயல்பு அடியோடு மாறிவிட்டிருந்தாலொழிய. பணத்திற்கு ஆசைப்பட்டுக்கொள்கையைமறக்கும்கும்பலிலே தாங்கள்ஒருவரல்ல என்பதைஉம்முடையமுன்னாள்எழுத்து எனக்குக்காட்டுகிறது.

ஜஸ்டிஸ்கட்சிஉருப்படுமாஎன்றுகேசரி என்றபெயருக்கேற்றபடி தாங்கள் கூறியிருக்கிறீர்கள், "எல்லாரும் காசுக்குமசியும் பிறவிகளல்ல. காசும்பணமும் மானரோஷமுள்ள சுதந்தரபுருஷனின் மயிர்க்காம்பைக்கூட அசைக்காதே" என்று.

இப்படிச்சொன்னதாங்கள் பணத்திற்கு ஆளாகியிருக்கமுடியாது. ஆனால் உம்முடைய அபிப்பிராயத்தில் ஏற்பட்டிருக்கும் அபூர்வமான மாறுதலுக்கு அர்த்தம்புரிந்துகொள்ளக்கூடிய காரணத்தைக் காணோம். ஒருசமயம்அந்தத் தலைவர்களை நீர்அறியாது அல்லதுமறந்து அவர்களும் உம்மையாரென்றறியாது இந்தக் கூட்டுறவு ஏற்பட்டிருக்கக்கூடும் என்றூகிக்கிறேன். புரட்சிகரமானதீர்மானத்தின் வித்து ஜஸ்டிஸ்கட்சி உருப்படுமாஎன்று தாங்கள்கட்டுரையில்தீட்டிக்கொண்டிருந்த அதேநேரத்தில் தங்களுடைய தாக்குதலுக்கு அன்றுஆளான பாண்டியனாலும் இன்று தங்களால் தாக்கப்படும் பெரியாராலும் தூவப்பட்டது. எந்தத் தேர்தலுக்கும், ஆசைப்படாதவர்களும், பட்டம் பதவிகளை விட்டுவிடக்கூடியவர்களுமான மனப்பான்மையுடைய ஒரு படை திரட்டப்படவேண்டுமென்பது அன்று ராமசாமி,பாண்டியன் அறிக்கையின் சாரம். அதை நீர் ஆதரித்திருக்கிறீர் அழகுற.அந்தநிலைமை இன்று செயலிலே வரும்போது அதற்குக் காரணமாகயிருந்த பெரியார்மீது பாய்கிறீர். நான்கேள்விப்பட்டிருக்கிறேன் இறைவன் திருவடி நிழலில் இரண்டறக் கலக்கவேண்டுமென்று இறைஞ்சுகின்ற பக்தர்கள் ஆண்டவன் அழைத்தாலும் சாகத்துணிவதில்லை என்று, அதுபோல இருக்கிறது உமது போக்கு. சேலம் மாநாட்டிலே வந்திருந்த மக்களின்கணக்குபற்றியும், ஊர்வலத்தினுடைய நீளம்பற்றியும் குடிஅரசும் திராவிடநாடும்பிறபத்திரிகைகளும் கூடுதலாக எழுதியிருப்பது எமக்குப் பிடிக்கவில்லையென்று தூதனில் தூற்றலைத் தொடுத்திருக்கிறீர். விருந்துக்குப் போயிருந்தவன் ஆயிரக்கணக்கிலே உண்டுகளித்தார்கள் என்று கூறுவதும் அந்தக்கணக்கு தவறு நான் ஒன்று விடாமல் எண்ணிப்பார்த்தேன் ஆயிரத்துக்கு பதினாறு குறைவு, எச்சில் இலையை எண்ணிப்பார்த்த என்னிடம் இப்படிப்புளுகலாமாஎன்றுபிச்சைக்காரப்பயல்கள் கொச்சை மொழியிலே பேசினால்சிச்சீ இப்படிக்கூறலாமாஎன்று கச்சையைவரிந்துக்கட்டிக்கொண்டு எவரும் சண்டைக்குக் கிளம்பமாட்டார்கள்.அதைப்போலஆள்கணக்கும் ஊர்வலநீளக்கணக்கும் கூட்டாது குறைக்காது நீர் கூறியிருக்கிறீரோ அல்லது குளறியிருக்கிறீரோ என்பதுபற்றி நான் ஏதும் கூறப்பிரியப்படவில்லை. காரசாரமாகக் கட்சித்துரோகிகளைக்கண்டித்த நமது கேசரி கனவான்களுக்குக் கவிபாடவும் தனவான்களுக்குத் துதிபாடவும், சீமான்களுக்கு முன்னோடும் பிள்ளையாக மாறவேண்டிய அளவு, வயோதிகப்பருவம் மேலிட்டுவிட்டதா, அல்லது வாத்சல்யத்திற்கு வேறு காரணம் உண்டா என்பதுபற்றி எண்ணுகிறேன், ஏங்குகிறேன். ஆகவேதான் அவர்களை அறிமுகப்படுத்தி வைப்பதன்மூலம், உம்மைநீர் உணரும்படி செய்ய முயலுகிறேன். முயற்சி திருவினையாகட்டும்!

"சொல்வதைச் சொல்லடா செல்லத் தம்பி, நான்சொகுசுக்காரச்சீமான்களின் நேசத்தைவிடமாட்டேன் தம்பீ"—என்று கேசரி கூறிவிட்டாலும் சரியே, நான் சொல்லவேண்டியதைச்சொல்லியாகவேண்டும்! வேறுஎதற்குப்பயன்படாவிட்டாலும் ஒரு பயனுள்ள காரியத்துக்கு இதுஉபயோகமாகலாம்! "எவ்வளவு எதிர்ப்பு! என்னென்ன இடையூறுகள்! கண்டனமும் கேலியும் கொஞ்சமா! இவ்வளவையும் தவிடுபொடியாக்குகிறேன், தங்கள் தயவுமட்டும் இருக்கவேண்டும்" என்று சீமான்களிடம் கூறிட, இந்தஎன் எழுத்தை எடுத்துச்செல்லலாம், கொஞ்சம்பலனும் கிடைக்கும். "நானும் ஸ்ரேய ஸ்ரேயத்தான் இடித்துச் சொல்கிறேன். ஆனால் என்ன சொன்னாலும் எருமைமாட்டின்மேல் மழைபெய்த மாதிரியில்தான், ஜஸ்டிஸ்கட்சித்தலைவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் இதுஎன்கடமை. அதைச்சொல்லி விடுகிறேன்"—என்று நிஷ்காமகர்மியாய், அச்சம்தயை தாட்சண்யம் எனும் கட்டுகளை உடைத்தெறியும்வீரனாய், மக்களின்நண்பனாய், கேசரி எழுதியது ஒருகாலம்! உஷார்! கபர்தார்! பெரியாரே! விலகிவிடு மரியாதையாக! என்றுஉறுமுவதுஒருகாலம்!! எனக்கு அந்தஉறுமலைக்கேட்டுக்கூடக் கோபமில்லை, அந்தஉறுமலைக்கிளப்புவதற்காகக் கேசரியை உசுப்பிவிடுகிறார்களே, அந்தக்காட்சியைக்காணும்போதுதான், கோபமும் சோகமும்சேர்ந்துவருகிறது.கூண்டுக்குள் கேசரிஇருக்கக்காண்கிறேன்! அதன் வாலைமிதித்துக்கொண்டு, சர்க்கஸ்வேடிக்கைக்காரன் நின்று, ஆரவாரம் செய்யும் மக்களிடம் வீரன் என்ற விருதும், பணமும் பெறுவதைப்பார்க்கிறேன்! இப்படிப்பட்ட நிலைக்குக் கேசரிவந்ததைஎண்ணிப் பரிதவிக்கிறேன்.

"பொட்டைக்கண்ணி! தட்டைமூக்கி! குணமோகோணல்! நடையோஆபாசம்!" என்று ஒருமங்கையை வர்ணித்தகவியாணத்தாகர்,பிறகுஅந்தப்பெண்வீட்டாரின் விருந்துண்டுகளித்து, பொருள்பெற்று மகிழ்ந்து, அதேபெண்ணைப்பற்றி, "அதற்காகண்தெரியாது! அடாமா! கூச்சம் அந்தப்பெண்ணுக்கு, அதனால் யாரையாவதுகண்டால்கண்களைமூடிக்கொள்ளும். நடத்தையை யாரும்குறைகூறமுடியாது, நாக்குப்புழுத்துப்போகும். சுகுணவதியல்லவா அந்தச்சுந்தரி" என்று பெருமையாகப்பேசி, இடம் முடித்துவைப்பதற்கும், நண்பர் கேசரியார், சுயநலக்காரர், சோம்பற்சீமான்கள், சொல்வேறு செயல்மாறுகொண்டவர்கள், தொண்டர்துயர் காணமறக்கும் துரைமார், என்று எவரெவரைத்தூற்றினாரோ அதேஆசாமிகளை இன்றுஅசகாயசூரர்களென்றுபுகழ்வதும், அவர்களாலேயே கட்சியைப் புனிதப்படுத்தமுடியும்என்றுபேசுவதற்கும்,என்ன வித்யாசம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை, புரிந்தவர்கள்கூறினால் கேட்கத்தயார். ஒருசமயம் கேசரி மறந்துபோயிருக்கக்கூடும், அந்தத்தலைவர்களின் ஆட்சியிலேகட்சிஇருந்தபோது, என்னென்ன குறைபாடுகள் மலிந்திருந்தனஎன்பதை. இதோ ஓர் அட்டவணை, ஜஸ்டிஸ்கட்சி உருப்படுமா என்ற உள்ளமுருக்கும் கேள்வியைக்கேசரியின்பேனாகிளப்பிற்றே அச்சமயம் அவரே தீட்டியது இது.

(1) "உத்யோகப்பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் ஜஸ்டிஸ்கட்சியில்ஏற்பட்ட சோம்பேறித்தனம். (2) உத்தியோகத்தை வகிப்பதிலும் ஏற்பதிலும் திருஷ்டி சென்றதேயன்றிப் பொது ஜனங்களைப்

(4ம் பக்கம் பார்க்க)

## சிங்கத்தின் பங்கம்!

3-ம் பக்கத் தொடர்ச்சி.

பக்குவப்படுத்துவதிலும்,கட்சிப்பிரசாரம் செய்வதிலும்,சிரத்தையற்றமனப்போக்கு (3) படித்தபிராமணரல்லாதார் எல்லாருக்கும் ஏககாலத்தில் உத்யோக இலாக்காவில் ஏற்பட்டதேவையைப் பூர்த்தி செய்யமுடியாமல் போனதால் ஏற்பட்ட பழி (5) காங்கிரஸ் சட்டமறுப்புப்போரிலே சர்க்கார் கையாண்டஅடக்குமுறையால் ஜஸ்டிஸ்கட்சியின் முதுகில்விழுந்த பிரம்படி (எதிரொலி) (4) ஜஸ்டிஸ்கட்சிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்வோர்களுக்குள் ஏற்பட்ட தனிப்பட்ட மனஸ்தாபங்களும் உள்நாட்டுக்கலகங்களும். (6) ஜஸ்டிஸ்கட்சியின் பிரச்சாரக்குறைவு. (7) இவை எல்லாவற்றையும்ஒன்றுபடுத்தி அனுபவித்ததால் ஜனங்களுக்குஏற்பட்ட அலுப்பு.

ஒருகட்சியை உருக்குலைக்க இவ்வளவு போதாதா?" இதுகேசரியின் எழுத்து, 12-4-36ல், சுதாதனில்.

இவ்வளவு போதாதா? என்று கேட்ட கேசரிதான், இப்போது, இவ்வளவுக்குக் காரணமாக இருந்துவந்த, இடித்துஇடித்துக்கூறிவந்தவர்களைப் பொருட்படுத்த மறுத்தவர்களிடம் இதுபோது கட்சியை ஒப்படைத்துவிட்டுப் பெரியாரை, "மரியாதையாக" விலகும்படி எச்சரிக்கை விடுக்கிறார்.

கேசரியின்கோபம் கொழுந்துவிட்டு எறிந்துகொண்டிருந்த அந்தக்காலத்தில், அந்தஜ்வாலையின் முன் சுயநல நரிக்கூட்டம் சுருண்டுவிழத்தொடங்கிய அந்தநேரத்தில், என்னென்ன குறைகளைக்குற்றங்களை, கட்சித்தலைவர்களென்போரிடம் இவரும்கண்டு, மக்களையும் காணச்செய்தாரோ, அதே தலைவர்களின் அதே போக்கு, அப்படியே இருக்கஇவருடைய நாக்குமட்டும் வேறு நாதம்பாட ஆடுகிறது, இதுஏன்என்று நான்கேட்டாலோ, கேசரி கர்ஜனைசெய்யும், ஆமாம்! கடுகு சிறுத்தாலும் காரம்போகாதாமே, அதுபோல!! ஆனால், எத்தனையோ "சர்" "திவான்பகதூர்கள்" சிறுவர்கள் என்பது தெரிந்திருந்தும், அவர்களின் சிறுமைக்குணங்களைக்கண்டித்துக்கட்சிஉருப்படவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு, வேலைசெய்த கேசரியின்தம்பிதானே நான், நான்இப்போது, கூண்டுக் கேசரிக்குக் கோபம்வருமோஎன்று பயப்படலாகுமா! சேச்சே! அண்ணன் ஆகாதவழி போனால், தம்பிதடுக்காமலிருப்பது குடும்ப தர்மத்துக்கே கேடல்லவா? ஆகவேதான், கட்டியகங்கணத்தை அவிழ்த்துப்போட்டுவிட்டுக்கனவான்களின் கமலபாதபூஜிதனாகிவிட்ட கேசரி, ஆரம்பித்து, இடையேவிட்டுவிட்டகாரியத்தை நான் வெற்றிகரமாக முடித்துவைக்க ஓரளவு உதவியாக இருந்தேன், உளம் மகிழ்ந்தேன். ஜஸ்டிஸ்கட்சி உருக்குலையும்படி செய்தவர்கள், ஊரார் முன்வந்து நின்று உரிமைகொண்டாடவும் முடியாதபடி அவர்களுக்கும் கட்சிக்கும் இருந்த தொடர்பு அறுபட, சேலத்திலே திட்டம் தீட்டப்பட்டபோது, திருப்தி அடைந்தேன். திடீர்ப்பாய்ச்சலிலே இறங்கியுள்ள கேசரியின், தலைகீழ்மாற்றமே என்னைத் திடுக்கிடச்செய்துவிட்டது. அடடா! என்ன பயங்கரமான நோயினால்பீடிக்கப்பட்டிருக்கிறார், கேசரியார், என்பதை எண்ணிடும்போது, விசனம் மேலிடுகிறது.

இப்போதுஎவரெவரைப் புனருத்தாரணத்தலைவர்களென்று கேசரிக்கூட்டத்தார்பூஜிக்கிறார்களோ, அவர்களிடம் ஜஸ்டிஸ்கட்சிஇருந்தபோது, கட்சியிலே மலிந்துகிடந்த ஊழல்களைக் கேசரிவெளிப்படுத்திக்கொண்டிருந்தபோது, 'குடிஅரசு" இதழும், பெரியாரும் அவர்தம்படையும், உருக்குலையும்கட்சியைத்தூற்றிக்கொண்டு தூரவிலகிஇராமல், அதற்கு உதவிசெய்து, உருப்படவைக்கும் வேலையைச்செய்துவந்ததைக் கேசரி மறுக்கமுடியாது, மறக்கலாம், ஆனால் மறதி மடைமையின்வாயற்படியாகையால்,கேசரிக்குள்ள மறதிபோக்க நான்முனைகிறேன், என்னஇருந்தாலும் அண்ணாஅல்லவா! பெரியாரின் உழைப்பு ஜஸ்டிஸ் கட்சிக்குக்கிடைத்துங்கூடப், பயனற்றுப் போகிறது என்பது அந்தக்காலத்திலே, கேசரியின்வாதம்.

"குடிஅரசு"க்கர்த்தாவும், எவ்வளவோ தூரம் ஆதரித்துவிட்டார், இக்கட்சிமீது ஏற்பட்ட வாஞ்சையின்காரணமாக,மனச்சாட்சிக்குமாறாக வக்கீல் வாதமும் செய்துவிட்டார். முறிந்துவிழாதபடிசிம்பு வைத்துக்கட்டியும், மூளி மூக்கரைதெரியாதபடி சாந்துபூசியும் பார்த்துவிட்டார்." என்று கேசரி அன்றுஎழுதினார். அதாவது, ஜஸ்டிஸ்கட்சியிடம்பற்று. அந்தப்பற்றின் காரணமாக உழைப்பு. அந்த உழைப்பின்மூலம், கட்சியிலே இருந்த குறைகளைப்போக்கமுயற்சி, இவை, "குடிஅரசு" கர்த்தாவினால்செய்யப்பட்டன, என்சொல்அல்ல ஆதாரம், நான்தான் "தலையாட்டிடும்தம்பி"யாயிற்றே, நான் மேலேகூறுவது வாலையாட்டும் (கோபத்தால்) கேசரியின்வாசகம்! இவ்வளவு கட்சிப்பணிசெய்தகாலைகுடிஅரசுக்கர்த்தா கண்டதுஎன்ன? கேளுங்கள் கேசரியின்பேச்சை.

"இதனால் தனிப்பட்டமுறையில் தனக்குஏற்பட்ட எதிர்ப்பையும் அவமானத்தையும் சகித்துக்கொண்டு, தனது சக்திபூராவையும் உபயோகித்துவருகிறார். ஆனால் என்னசெய்வது? எல்லா உழைப்பும் வியர்த்தமூலைக்கேபோய்ச் சேர்கின்றது. எவ்வளவு பாடுபட்டாலும் ஜஸ்டிஸ்கட்சிஇருக்கட்டுமா, சாகட்டுமா? என்ற கேள்வியைத்தான்கேட்கிறது. அதிர்ஷ்டஜாதகம் இதற்கு இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் என்ன? இஞ்ஜினில்ஏற்பட்ட கோளாறு, டிரைவரின் சத்தக்கட்டையா?"

இப்படி வெறுத்துவிட்டார் கேசரியார் அழுக்குமூட்டைகளை! இப்போது, அழுக்கு மூட்டைகளைச்சுமக்கிறதற்கு, ஆள் நம்பர் ஒண்ணு! என்றுகூறுகிறார், கேசரிக்கு ஆகுமாஇப்போக்கு, இதுவேசரிஎன்றுகூறமுற்படுவாரானால், நான் தலையைத் தொங்கவிட்டுக்கொள்ளவேண்டியதுதான். இப்படிப்பட்ட அண்ணனுக்குத் தம்பியென்று கூறித்தீரவேண்டி இருக்கிறதே என்ற வெட்கத்தால்!

ஜஸ்டிஸ்கட்சித் தலைவர்கள் என்று அழைக்கப்படவேண்டிய தகுதிவாய்ந்தவர்களைப்பற்றிக்கேசரி, அனுபவபூர்வமாக, ஆதாரங்களுடன், ஆணித்திறமாக முன்பு எழுதிவந்ததற்குக்காரணம், கட்சி, கனதனவான்களின் கொலுமண்டபமாகிவிடாமல், மக்கள்மன்றமாக வேண்டும் என்பதற்காகத்தான். மக்களின்மன்றமாகக்கட்சிமாறிவிட்டதுசேலத்தில்.அந்த ஆச்சரியத்தைக்கண்டு அச்சமுற்ற ஐஸ்வரியவான்கள், ஆஹா! நமது உல்லாச ஓடம்கவிழ்ந்ததே என்று ஓலமிடுவதிலே அர்த்தமுண்டு. எந்தஇலட்சியத்துக்காகக் கனல்கக்கியாகக் கேசரிகாட்சி அளித்தாரோ, அதேஇலட்சியம் சித்தியான நேரத்திலே, ஏன் சிதறிஓடும் சீமான்களுக்குஇவர்சிகைசீவிப்பூமுடிக்கும் தாதிவேலையை ஏற்றுக்கொள்கிறார். இவருக்கு இதுதகுமா? அவ்வளவு அதிகமாக வாவேலையில்லாத்திண்டாட்டம் வேதனையைமூட்டிவிட்டது. ஜஸ்டிஸ்கட்சியின் நிர்வாகத்தைத்தமதுபிடியிலே முன்னாளில் யாரார்வைத்துக்கொண்டிருந்தார்களோ, அவர்களிடம் கேசரியார், பக்திபூர்வமாகஇருந்துபழகி, அவர்களின் குணங்களை நன்குஅறிந்து, ஆற்றலை அளவெடுத்துப், பிறகேதான், ஜஸ்டிஸ்கட்சி உருப்படுமா? என்ற அஸ்திரப்பிரயோகம் செய்தார். அந்தக்காலத்திலே, இவருடையநம்பிக்கைக்குப் பாத்திரராகும் பண்புபெறாதிருந்த பிரமுகர்கள், இன்று இவரால் பூஜிக்கப்படவேண்டியவர்களானவிந்தை இருக்கிறதே,இது, ஹிட்லரின்காலடிவீழ்ந்த பெட்டெயின் (பெதாங்) வரலாற்றைவிட வேடிக்கையாகஇருக்கிறது. வெர்டூன் வீரன்பாரிஸ் வீணனானான் கர்ஜனைபுரிந்தகேசரி, காசடிக்குப்பயப்படும்பேர்வழியானார். ஆனால் தேகோல்கள் (டிகாலே) திகைக்கமாட்டார்கள்! விடுதலைப்போரைநிறுத்தமாட்டார்கள்.

என், பழயபசலிகளைக்கேசரிஅன்றுகண்டித்தார். சொந்தவிரோதம் காரணமாகவா? இல்லை! கட்சிநன்மைக்காக! இதோ கேளுங்கள் அவருடையமொழியை!!

(10ம் பக்கம் பார்க்க)

# பேசாதது!

(S. I. L. F.) ஜஸ்டிஸ்கட்சியைத் தாமே நடத்துவதாகப்பாத்தியம்கொண்டாடும், பிரமுகர்கள் சென்றகிழமை சென்னையில் ஒருபங்களாவிலே கூடினராம், சென்னையிலே மாநாடு கூட்டுவது பற்றியோசிக்க. யோசித்ததின்முடிவாக, மாநாடு இப்போது அவசரப்பட்டுக்கூட்டுவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டதாம். எப்ரல் மாதம்நடத்த உத்தேசிக்கப்பட்டதாம். இடையிலே கட்சிக்கிளைகளை ஜில்லாக்களிலே பயிரிடத்திட்டம் போடப்பட்டதாம்.

ஜஸ்டிஸ்கட்சியின் பெயரைமாற்ற விரும்பாதவர்கள்மட்டுமே இந்தக்கூட்டத்திலே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையுடன்கூடிய அந்தக்கூட்டத்திலே, கட்சியின்பெயரை மாற்றிவிடலாமா என்று பேசப்பட்டு, பிறகு "இப்போது" வேண்டாம்என்று தீர்மானித்தனராம்.

இந்த மகத்தான மந்திராலோசனைச் சபைக்குப்போகமுடியாதுபோன மனவருத்தத்துடன், ராவ்சாகிபு ஆகவிரும்பும் ஒருஅன்பர், கென்சிங்டன் பங்களாக் கூட்டத்திலே ஆற்றஇருந்த அரியசொற்பொழிவை, வெளியிடும் பிரத்யேக உரிமையைப் பெரியமனதுவைத்துநமக்குத்தரவே, அதுஇங்கேவெளியிடப்படுகிறது. கண்டுகளியுங்கள்.

* * * *

"கவலையைவிடுங்கள்! கவலையேஇருந்ததில்லையா? அப்படியானால் கொஞ்சம் கவலைப்படுங்கள்! எதற்காகக் கவலைப்படுவது என்றுகேட்கிறீர்களா? அடா அடா! இந்தச்சுபாவம்தானேவேண்டாம் வேண்டாம் என்றுதலைப்பாடாக அடித்துக்கொள்கிறேன். விடமாட்டேன் என்கிறீயே அப்பா! சரி, தொலையட்டும், சொல்கிறேன்கேள். மகத்தானமதியும் மலைபோன்றநிதியும் படைத்திருக்கும் சீமான்களின் பிடியிலேஇருக்கவேண்டிய ஜஸ்டிஸ்கட்சியைப் பெரியார் என்ற பழிச்சொல்லுக்குப்பாத்திரமான ஈ. வெ. ரா. பிடித்துக்கொண்டாரே, என்று கவலைப்படுங்கள். கவலைப்பட்டுப்,பிறகு, அதிலேயே மூழ்கிவிடவேண்டாம், கவலையை விடுங்கள்! ரட்சகர்கள்வந்துவிட்டார்கள், கட்சியைவிடுவிக்க, உங்களைவிடுவிக்க.

பெரியார் கட்சியில் இல்லை! ஆமாம், கட்சி பெரியாரிடம்இருக்கிறது என்று கூறுகிறாரா, அந்தநம்பாதே, கட்சி அவரிடம்இல்லை. இந்த ஜனங்களிலே ஒரு இருபதனாயிரம்பேர்கள், கட்சியின் மெம்பர்களானார்கள், ஆனால்என்ன, இரண்டு இலட்சம்பேர்கூடச்சேரட்டுமே, பெரியாரே எங்கள்தலைவர்என்று கூவட்டுமே, கூவினால் நாங்கள் பயப்படுவோமா, ஓஹோஹோன்னும், நாங்களாவது கூச்சலுக்குப்பயப்படுவதாவது, ஏழையின் அழுகுரல்கேட்டே பயப்பட்டதில்லை, இல்லாதவர்களின்இரைச்சலைக் கேட்டோ திகில்கொண்டதுகிடையாது, நாங்கள் இனி வேறுஎதற்குப்பயப்படப்போகிறோம். ஆகவேஇன்னமும் எவ்வளவுபேர், ஜஸ்டிஸ்கட்சிக்குப்பெரியார்தான்தலைவர் என்று ஆணையிட்டாலும்சரிதான், நாங்கள் அஞ்சப்போவதில்லை, ஜஸ்டிஸ்கட்சியிலே பெரியார்கிடையாது, அவர் திராவிடர் கழகத்துக்குப்போய்விட்டார் என்று கூறப்போகிறோம். நாங்கள் கூறினால், இந்தப்பெரியார்மாதிரி, ஜனங்களைக்கூட்டிவைத்துக்கொண்டு உரத்த குரலிலேபேசிக் கொண்டிருக்கமாட்டோம்.

லேடீஸ் அண்ஜெண்டில்மென்! சீமான்களே! சீமாட்டிகளே! என்றமிருதுவான குரலிலே அழகானமண்டபத்திலே, அந்திவேளையிலேபேசுவோம். நாங்கள் இனி ஜஸ்டிஸ்கட்சிக்கு நாடெங்கும் கிளைகள் உண்டாக்கப்போகிறோம்.பிறகுமாகாண மாநாடுநடத்துவோம். அதற்குச் சர். சண்முகம்செட்டியாரவர்களைத் தலைவராக்குவோம். உங்களுடைய மதசமுதாய விஷயத்தைப்பேசி, உங்கள் மனதைப் புண்ணாக்கமாட்டோம். உங்களுடைய திருநாமத்தையோ திருநீற்றையோ, நாங்கள் குறைகூறமாட்டோம். சுதந்திரமாக நீங்கள்வாழலாம். ஆகவேகவலையைவிடுங்கள்!!

நாங்கள் என்னமோபட்டம்பதவிகளை விட்டுவிட மனமில்லாததால் இப்படித் தனியாகக்கிளம்பிவிட்டோம் என்றஎண்ணாதீர்கள். பட்டம் இங்கே யாருக்கு வேண்டும். அது இருந்தால்கூட எங்களுக்கு அது இருப்பதாகக்கவனம்இருப்பதில்லை, கவலையும்கிடையாது. அதைஒரு பெரிய பிரமாதமாகப்பேசுகிறார்கள் பட்டத்தைவிட்டுவிடு, பட்டத்தைவிட்டுவிடு என்று. அதுஅவரவர்கள்இஷ்டம்தானே! இவர்களுக்கென்ன? கஷ்டநஷ்டம் தெரியாததுஷ்டர்கள். கிடக்கட்டும்,பட்டமும் கிடக்கட்டும் அதை வெட்டிவிட வரும் துஷ்டர்களும்கிடக்கட்டும், காரியத்தைக் கவனியுங்கள். மதவிஷயத்திலே தலையிட்டு நீங்கள் மனம்புண்ணாகி இருக்கிறீர்கள். இல்லை இல்லை என்று சொன்னால் நாங்கள் நம்பமாட்டோம். உங்கள்மனம் புண்ணானது உங்களுக்குத்தெரியவில்லை. ஆகையினால்தான், உங்கள்மனதைப்புண்ணாக்கும் மாபாவிகளை நீக்கிவிட்டோம். இனிக்கட்சியை நாங்கள் நடத்துவோம், நீங்கள் கவலையின்றி இருங்கள்! ரட்சகர்கள் முன்வந்துவிட்டார்கள், இனிஎன் உங்களுக்குக்கவலை! இதோ பாருங்கள், எப்படிப்பட்ட அரியபெரிய சீரிய காரிய வீரியக்கனவான்கள் இருக்கிறார்கள்கட்சியை நடத்த. இதோ இவர்தான் துரைசாமிமுதலியார் ராவ்பகதூர். விரைவிலே இவர் திவான்பகதூராவதற்குத்திருப்பதி வெங்கடேஸ்வரன் அருள் புரிவானாக! இவர் வரவேற்கப்போகிறார், மகாநாட்டை. இப்போது அல்ல! அவசரம் ஆகாது. மாநாடு, கொஞ்சம்நாள்கழித்து நடக்கும். பள்ளிக்கூடத்துப்பையன்கள், சட்டைகளிலே A. F. எப்ரல்பூல் என்று எழுத்துஅடித்துக்கொள்வார்கள், தெரியுமா, எப்ரல்மாதத்தில். வேடிக்கையாக இருக்கிறது என்று சிரிக்கிறீர்களா? சிரியுங்கள்! உங்கள் சந்தோஷத்தைக்கண்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். நாங்கள் ஈ. வெ. ராவைப்போலச், சிரிப்பதற்காக நான்இதைச்சொல்லவில்லை, என்றுபேசி, உங்களுடைய சிரிப்புச்சுதந்திரத்தைப்பறிக்கமாட்டோம், சந்தோஷம் வருகிறபோது சிரிக்கிறஉரிமை உங்களுடையது, அதை நாங்கள் பறிக்கமாட்டோம், நாங்கள் சர்வாதிகாரிகள் அல்ல! சிரித்தீர்கள் அல்லவா, பள்ளிப்பையன்கள் எப்ரல்மாதத்தில் நடத்தும் வேடிக்கையைச்சொன்னதும். சரி, மாநாடு எப்ரல்மாதம்நடைபெறப்போகிறது.

சர். சண்முகம் செட்டியார்
சர். குமாரராஜா
சர். பி. டி. இராஜன்
திவான்பகதூர் அப்பாதுரைப்பிள்ளை
திவான்பகதூர் M. ராமன்
ராவ்பகதூர் M. கிரியப்பா
ராவ்பகதூர் V. கலியாணசுந்தரமுதலியார்
ராவ்சாகிப் கோதண்டராமமுதலியார்
ராவ்சாகிப் தர்மலிங்கம் பிள்ளை

இப்படிப்பட்ட பிரமுகர்கள்—வெறும் வெட்டி ஆட்களல்ல—வாடகை வீட்டிலிருந்து வெளிக்கிளம்பி மேல்மூச்சுவாங்க வாங்க ஓடிவரும் ஆசாமிகள் அல்ல—அது கவனமிருக்கட்டும் — பொறுப்புவாய்ந்த கனவான்கள்.

இவ்வளவுதானா? ராவ்சாகிப் P. கோவிந்தாரெட்டி, ராவ்சாகிப் Y. லட்சுமிநாராயணரெட்டி, ராவ்சாகிப் C. சுப்பையசெட்டி, ராவ்சாகிப் P. கோவிந்தாரெட்டிபோன்ற ஆந்திரத்தலைவர்கள், கட்சியை இனிக் கண்ணுங்கருத்துமாக நடத்த அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே கவலைவேண்டாம்! இப்படிப்பட்டவர்களைக்கொண்டல்லவா ஒரு கட்சிநடத்தவேண்டும்.இதைவிட்டுவிட்டு, பட்டம் வேண்டாம்பதவிவேண்டாம் என்றுபதட்டமாகப்பேசும்பேர்வழிகளா கட்சியைநடத்துவது?

இவர்களெல்லாம், பட்டங்களை ஏன் விட்டுவிடக்கூடாது என்று கேட்கிறீர்களா? நல்லகேள்வி, ஏன்விடவேண்டும்? அப்படிஒன்றும் இங்கே சட்டம்கிடையாது. ஆமாம்! ராவ்சாகிபுகள் ராவ்பகதூராகவேண்டுமானால், ராவ்பகதூர்கள் திவான் பகதூர்களாகவேண்டுமானால், திவான்பகதூர்கள்சர்கள் ஆகவேண்டு

8-ம் பக்கம் பார்க்க.

**விற்பனைக்கு.**

லாரன்ஸ் மேயோ மேஜிக் லேண்டர்ன் மிஷின், சிலேட் விளம்பரம் செய்யும் மிஷின், பல்ப் இல்லை. நான்கு லென்சுகள், உள்ளது.

விலை விபரங்களுக்கு எழுதவும்.

விலாசம்:—
A. கந்தசாமி செட்டியார்,
நெ. 10, சாமிசெட்டி வீதி,
திருப்பத்தூர்.
(N. A. Dt.)

**திராவிட நாடு.**

காஞ்சி 7—1—45 ஞாயிறு

# 1945.

கடந்த எழாண்டுகளும் போர்ப்புயலில் சிக்குண்டு, மக்களுக்குப் பல துன்பங்களையும் தொல்லைகளையும் தந்ததுபோலவே இவ்வாண்டும் போர்ப்புயலின் கொந்தளிப்புக்கிடையேதான் தோன்றியுள்ளது. என்றாலும் புயலின் கொந்தளிப்பையும், அதனால் மக்கள்படும் சொல்லமுடியாத தொல்லை மிக்க துன்பங்களையும் இப்புத்தாண்டின் புதுப்போர் முறை அறவேஒழித்துவிடும்என்று எதிர்பார்க்கும் நிலைமையிலேயே ஒவ்வொருவரும் உள்ளனர். இந்த நன்முடிவைக்காணுவதற்கு வழிகோலவே, முப்பெருந்தலைவர்களான சர்ச்சிலும், ஸ்டாலினும், ரூஸ்வெல்டும் விரைவில்சந்தித்துத் தக்க திட்டங்கள் வகுக்கப்போகிறார்கள்என்று நம்புகிறோம்.

இதற்குமுன்னர் பலதடவை சந்தித்துப்பேசிய தலைவர்கள், இப்போதுமீண்டும் சந்திப்பதென்றமுடிவுக்கு வந்ததற்கு நாம் கூறும் இந்தக்காரணத்தைவிட வேறெதுவும் இருக்கமுடியாதென்றே கருதுகிறோம்.

உலக மக்களின் நல்வாழ்வில்கருத்துக் கொண்ட எவரும் பொறுப்பு வாய்ந்த தங்கள் எண்ணங்களைப், போரை இன்னும் நீடிக்கும் முறையில் ஒருபோதும் வளரவிடவே மாட்டார்கள். அவசியம் அதற்கான திட்டங்களை வகுத்து 1945-வது ஆண்டின் முடிவுக்குள் இந்தக்கொடிய போர்க்கொந்தளிப்பைப் போக்கி மக்களின் சமாதான வாழ்க்கைக்கு வழிகோலுவார்கள் என்றநம்பிக்கையே, இப்புத்தாண்டுக்கு வாழ்த்துரை கூறும்படி செய்தது. வெல்க நேசநாடுகள்! நிலவுக சமாதானம்!! அமைக சுதந்திரம் அனைவர்க்கும்!!!

# தமிழ்த் திருநாள்

## (பொங்கல் விழா)

(14, 15, 16-1-45) தைத்திங்கள் 1, 2, 3 ஆகிய மூன்று நாட்களிலும் மேற்படிவிழா காஞ்சிபுரம் செல்லுக்காரத் தெரு, இராசகோபால கலியாணமண்டபத்தில் புலவர்மே.வி. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

கி. இராமலிங்கம் M. A; பங்கீடு அலுவலாளர், காஞ்சி.
க. அன்பழகன் B. A; (Hons) -சென்னை.
T. S. கண்ணபிரான்பிள்ளை.
A. காந்திமதிநாதன் M.A.,
மா. இராசமாணிக்கம்பிள்ளை, M.O.L.L.T.
C. N. அண்ணாதுரை, M.A.,

முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள் அன்பர்கள். அனைவரும்வருக!

# சிங்கத்தின் பங்கம்!

8-ம் பக்கத் தொடர்ச்சி.

தையே மறந்துபோன, ஒருவரைத் தலைவராக்குவதும், அவருடைய தத்துவங்களுக்கேற்றபடி கட்சியைத் திருத்தி அமைப்பதும் ஆகிய காரியமேயாகும் என்று உணர்ந்து, சேலத்திலே செய்யப்பட்ட தீர்மானத்தை நான், கட்சியின் மறுமலர்ச்சி, என்று மகிழ்ச்சியுடன் கருதுகிறேன். நீரோ, மருளும் சீமான்களுக்கு லாலிபாடுகிறீர்! அந்த நாளிலே நீர்கட்சி உருப்படவேண்டும் என்பதற்காகக் கூறியவற்றை, நான் ஏற்றுக்கொண்டதற்காக அப்போது அகமகிழ்ந்தீர். அகமகிழ்ந்ததுமட்டுமல்ல, "பாரதன் மற்றொருசேவை செய்வதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஜஸ்டிஸ் கட்சியின் பத்திரிகைவிஷயமாக நான் கூறிய எல்லாயோசனைகளையும் வந்தனத்தோடு ஏற்றுக்கொண்டு அதை நமது இயக்கப் பெரியார்களுக்குச் சமர்ப்பிக்கிறேன் என்று பாரதன் வாக்களிக்கிறார். ரொம்பச்சந்தோஷம் பாரதனாரே! அப்படியே செய்யும். ஆனால் ஒன்று. சமர்ப்பிக்கிறமார்க்கம் இருக்கிறதே அது எப்படி என்று தெரிவிக்கமுடியுமா? என்னைப்போலவே நீரும் பத்திரிகைமூலமாகச்சமர்ப்பிக்கப்போகிறீரா, அல்லது நேரிலேயே தெரிவிக்கப்போகிறீரா? பத்திரிகை வழியாக இருப்பின் நீர் சொல்வது அவர்களுக்கு ஏறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. நேரில் கூறுவதாயிருந்தால் இப்போதிருந்தே அவர்களின் பேட்டிக்குத் தயார் செய்து கொள்வது நல்லது" என்று கேலியுடன் கலந்த புத்திமதி கூறினீர். நான் தங்களால் தீட்டப்பட்ட கட்டுரைகள்மூலம், நமது தலைவர்களிலே ஒருவரைக்காணவேண்டுமென்றால் குதிரைக்கொம்புபோலிருக்கும், வேறொருவரோ நித்ராதேவியுடன்பகல்பன்னிரண்டுவரை கொஞ்சுபவர், இன்னுமொருவரோ ஓய்வுநேரத்திலே செடிகொடி பயிரிடுபவர், மற்றவர்களோ, பதவி வேட்டையிலே ஈடுபட்டவர்கள் என்பதைத் தெரிந்துகொண்டதால் தலைவர்களின் பேட்டிக்கு வேட்டியை இழுத்துக் கட்டிக்கொண்டு புறப்படவில்லை. வெறும்எழுத்து வேட்டுகளினாலேயே தீர்த்துவிடமுடியும் என்று எண்ணி ஏமாளியாகவில்லை. இப்படிப்பட்டகட்சி வேண்டாம், வேறோர் கட்சி அமைப்போம் என்ற கோமாளி வேலையிலே குதிக்கவில்லை. நிதானமாக, ஆனால் நிச்சயமான நம்பிக்கையுடன், ஜஸ்டிஸ் கட்சி அரண்மனை ஏவலனாக இருக்கும் நிலையை மாற்றி, மக்களின் தோழனாவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சியில், பெரியாரின் பெருந்தொண்டிலே பங்கு கொண்டேன், அதனால் சேலத்திலே சீமான்கள் சித்தம் சோரவும், பூமான்கள் புலம்பவும், பட்டம் விரும்புவோரின் முகத்தில் கோபம் குதிக்கவும், பதவி வேட்டைக்காரர் பதைக்கவும் கண்டபோது, பயமில்லை, ஜெயமுண்டு மனமே என்று (மனதிற்குள்) பாடினேன், என் மகிழ்ச்சியை மங்க வைத்துவிட்டீர், சிங்கமாகிய நீர் தங்கக்கோட்டையின் தகதகப்பினால் தாக்குண்டு, பங்கம் அடைந்ததன் மூலம்.

# இசை விழா.

காஞ்சித் திராவிடர் கழக இசைவிழா 4-1-45 வியாழன் மாலை 5-30 மணிக்கு விமரிசையுடன் ஆரம்பமாயிற்று. விழாச் செயலாளர் தோழர் T. P. S. பொன்னப்பா அவர்கள் இவ்விழாவைத்துவக்கி வைக்கும்படி செங்கற்பட்டுமாவட்டமன்றத்தலைவர் தோழர் T. சண்முகம் அவர்களைக்கேட்டுக்கொண்டதற்கிணங்க தோழர் சண்முகம் அவர்கள் தற்காலத் திராவிடநாட்டின் நிலைமையையும், திராவிடரின் நீங்காக்கடமையையும் விளக்கமுறப் பேசிவிழாவைத் துவக்கிவைத்தார். பிறகு மதுரை திரு மாரியப்பசாமிகள் இன்னிசையும், இரவு 9-30 மணிக்குத்திருவாவடுதுறை, (கக்காயி) திரு: நடராசசுந்தரம் அவர்களின் நாதசுரவிருந்தும் இனிது நடைபெற்றது. ஏராளமான மக்கள் இசை விருந்தைஉண்டு இன்புற்றார்கள். மேற்கொண்டு இசைவிழாக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

# இந்துசட்டத் திருத்தம்

**சென்னை, இந்துசட்டச் சீர்திருத்த உட் கழகத்தின் கருத்து**

சென்னை, தமிழர் நல்வாழ்க்கைக்கழகம் நிறுவிய இந்துசட்டச் சீர்திருத்தம் உட்கழகம் இராவ் உட்கழகத்தினர் வெளியிட்ட இந்த சட்டத் திருத்தத்தை கூர்ந்து நோக்கி ஆதலால் அறிவிக்கப்பட்ட கருத்தின் சுருக்கம் பின்வருமாறு.

இந்து சட்டத்தில் திருத்த வேண்டியவைகள் பல இன்றியமையாதுஇருத்தலின் இந்து சட்டம் திருத்தப்பட வேண்டியதுவரவேற்கத்தக்கதும்விரும்பத்தக்கதுமாகும். முகவுரையில் கூறியபடி இந்து சட்ட முழுமையும் திருத்தவேண்டிய இராவ் உட்கழகம் நிறுவியிருந்தும் சில முக்கிய பகுதிகள் அஃதாவது கடனும் பொறுப்பும் சொத்தை அடகுவைப்புஉரிமையும் சொத்தைப் பங்கிடும் உரிமையும் வாரிசுகள் சொத்தை அடைவதற்குமுன் வாழ்க்கைச் செலவு பெறும் உரிமையும் மற்றும் பங்கீடு,தருமத்திற்கு சொத்தை வழங்குதல் முதலியன இத்திருத்தத்தில் சேர்க்கப்படவில்லை. ஆகவே இவைகளையும்சேர்த்துமுழுஇந்துசட்டமும்திருத்தப்பட்டு மத்திய சட்டசபையிலும் மாகாண சட்டசபையிலும் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாகுதல்தான் சாலச்சிறந்ததெனக் கருதப்படுகிறது.

இந்துமக்கள் எனப்பொதுவாகப்பலர் அழைக்கப்படாமலும் அவர்களது நடையுடை, உணவு, மொழி, பழக்கவழக்கம் முதலியனவற்றை நோக்க இவர்கள் பல்வேறு பிரிவினரென்றும், மொழி வேறுபாடுடையவர்களென்பதும் வெளிப்படை. ஆகவே இவர்கள் அனைவருக்கும் ஒரே சட்டம்வகுக்க முயல்வது அவர்களது நாட்டு—சமூகமுன்னேற்றத்திற்கும் பொருளாதாரத், திட்டத்திற்கும் பெரும் தடையாகுமாதலாலே, திருத்தங்கள்காலத்தை ஒட்டியும் முன்னேற்றமான கொள்கைகளை வரவேற்றும் செய்யதக்கவைகள்தான் வேண்டற்பாலதாகும்.

**பழக்க வழக்கம்**

பழக்க வழக்கங்களைப்பாகுபடுத்திஇன்னின்னவைதான் ஏற்கத் தக்கவையென முடிவு செய்வதுதான் நல்லது. இல்லையேல் பழக்க வழக்கங்கள் தோன்றுவது வெகுசுலபம். ஆனால் அவைகளை உறுதிப்படுத்துவதும் உறுதிப்படுத்த மறுப்பதும் பல பெரும் இடுக்கண்களை மக்கள்பால் அடையச் செய்யும்.

**சாதிப்பிரிவு**

இந்துக்கள் அனைவருக்கும் ஒரேவித சட்டம் செய்யப்புகும்போது, சாதிப்பிரிவினைகளை ஏன் இத்திருத்தத்தில் சேர்க்கப்பட வேண்டியிருக்கிறது, மேலும் இப்பிரிவினைகள் உயர்வுதாழ்வைக் குறிப்பதால் ஒற்றுமைக்கு மார்க்கமில்லை மற்றும் பிராமணரல்லாதார்சிலர் அய்யங்கார் அய்யர் என அழைக்கும்படி செய்து வருகிறார்கள்.இன்னும்சிலகாலத்தில் பிராமணர் யார் மற்றவர்யார் எனச் சொல்வதற்கில்லாமல் முடியும். ஆகவே இத்தத்திருத்தத்தில் சாதிப்பிரிவினையை அடியோடு களைந்துவிடுதல் நலமாகும்.

**பங்கிடாத சொத்துக்கு வாரிசு**

சொத்தைப் பங்கிடும் முறையிலும் சொத்தைப்பெறுவதற்கு முறையாக உரியவர்களை வகுப்பதிலும் மத சம்பந்தமான தொடர்பேயிருத்தல் கூடாதாகும்.திருத்தம் சட்டத்தில் இயற்றப்படுவது வெறும் மாற்றத்திற்காகமட்டுமிருத்தல்போதாது. அத்திருத்தம் மக்களுக்கு நன்மைபயப்பதாயும் இதுவரையில் மக்களுக்கு விளைத்துவந்த கொடுமைகளை அறவே நீக்கத்தக்கதாயுமிருத்தல்இன்றியமையாததாகும்.

குடும்பச் சொத்தைப் பங்கிடுகையில் குடும்ப மக்கள் அனைவருக்கும் ஒன்றாகக் கருதிச் சரிபங்கு வழங்கவேண்டும்.

தாசிமக்களுக்கும்சட்டப்படி மணமாகாதமாதுக்கு பிறந்த மக்களுக்கும், சிறுவர்களாய் வயது வாராதபோது வாழ்க்கைச் செலவுக்கும், வயது வந்ததும் பாகத்தில் ஒரு பகுதியும் கொடுக்கப்படுவதை ஏனோ தடைசெய்யச்சட்டம்திருத்தப்படவேண்டும். பெற்றோர் செய்தகுற்றம் ஏனோ பிள்ளைகளைச்சாரவேண்டும்.

இந்துமகளிர்சொத்துரிமைச் சட்டப்படி இறந்த மகனது மனைவிக்கும் அவனுக்கு முன்பிறந்தஅவன்மகன் மனைவிக்கும்அவனுக்கும் முன்னர்இறந்தஅவனது மகனது இல்வாழ்கைத் துணைவிக்கும் சொத்தில் பங்கிருக்கும்போது, விதவையின்மகன் பேரன், பேரனுக்குப்பேரனுக்கும் சொத்துப்பங்கிடுவதில் சேர்த்துக் கொள்வதற்கு என்னதடை

ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடின்றி ஒன்றாகக்கருதவேண்டிய நிலைமை யேற்பட்டஇக்காலத்தில் மகனது மகளையும் மகளது மகளையும் வாரிசாக ஏன் ஏற்றல் கூடாது? உடன்பிறந்தவளையும் உடன் பிறந்தானுடன் பங்கிட்டுக் கொள்ளுதல் ஏன் கூடாது?உடன்பிறந்த மகளிரது மகனும் மகளும் சொத்தில் பங்குகொள்வது சரியே.

ஒவ்வொரு விதவையும் ஒரு பங்கு பெறுதல் வேண்டுமே யல்லாது எல்லா விதவைகளுக்கும் சொத்தில்ஒருபங்கைப் பிரித்துக்கொடுத்தல் கூடாது, பாகம் பிரிந்தமகனும் பிரிவினையடையாத மகனும் சரிபங்கு பெறுதல் கூடாது. இதுபாகப் பிரிவினையை முன்கூட்டி முடிக்கமுயல ஏதுவாகும்.

மணம் முடித்த மகளுக்கும் மணமுடியாத மகளுக்கும் சொத்தைப் பங்கிடும்போது மணமாகாத மகளுக்கு மணத்திற்காகச்சொத்தை ஒதுக்கிமிகுதியைப் பகிர்ந்துகொடுத்தல் வேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் பங்கீடு சொத்தின் அளவு தவிர்த்துச்,சமஉரிமை வழங்குவதில் சம்மதித்த பிறகு மகன் வழியிலும் மகள் வழியிலும் தோன்றும் மக்களுக்கு அதே முறையைக்கையாளுதல் வேண்டற்பாலதே.

“ஆச்சாரியார்', “சீடர்” “சப்பிரமாச்சாரியர்” முதலியன பொருந்தாதனவையாயும் அறிந்துகொள்ள இயலாதவைகளாயும் இதுபோது இருத்தலால்அந்தச் சட்டம் இதற்குமுன்னர் எப்போதாவது நடைமுறையிலிருந்து வந்தாலும் இனி இருக்க நேர்மை யற்றதாகும்.

நெருங்கிய உறவினரில்லாமல் இறந்தவர் சொத்து அடுத்தனை தரும சங்கங்களுக்கு வழங்கி, அதனை ஏழைமக்களுக்கும் நோயாளிகளுக்கும் பயன்படச் சட்டம்வகுக்க வேண்டும்.

துறவிகள், பரதேசிகள், சந்நியாசிகள் இவர்களுக்கும் இவர்களுக்குப்பின் இவர்கள் தகுதியைப்பெற ஒரு முறை பண்டைக்காலத்திலிருந்துவந்தது. அந்தச்சட்டம் மற்றத் திராவிடச் சட்டங்களுடன் மறைந்துபோனது.

குடும்பச் செலவு இறந்தவர் மகன்களுக்குள் ஒரு சிலருக்கு மணம் முடிந்தும் சிலருக்கு மணம் நடைபெறாதிருந்தால் நேர்மையான பணத்தை மணமாகாத மகன்களுக்காக ஒதுக்கியதுபோக மிகுதியைக்கொள்ளுதல் வேண்டும்.

குடும்பச்செலவுக்குப்பணம் எடுத்துக் கொள்ளுமுன் சொத்தின்மீது கடனிருந்தால் அதனை முன்னதாகக்கொள்வதுதான் நேர்மையானதாகும்.

**மணமும் விலக்கும்**
**தெய்விக மணம்**

“வழக்கமான சடங்குகள்” என்பது விவரிக்கப்படாததும் அறியப்படாததுமாகும்.மண முறைகள் ஊர் ஊர்களுக்கும், மக்கள் மக்களுக்குள்ளும் குடும்ப குடும்பங்களுக்குள்ளும் வேறுபாடுகள் உள.மேலும் மணச்சடங்குகள் குறைந்தும் மணமக்களது தாய் மொழியில் மணச்சடங்குகள் நடைபெறவேண்டுமென்றும் மணமக்களுக்கும் வந்திருப்பவர்களுக்கும் தெரியாத வடமொழி மந்திரங்கள் தேவையில்லையென்றும் கருதப்படும் இக்காலத்தில், இவைகளிருந்து எவை வேண்டத்தக்கவை எவைதகாதவையென [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்துசட்டத் திருத்தம்.

7-ம் பக்கத் தொடர்ச்சி.

தலாலும்எம்மொழிலேனும் மணமுறை நடத்தலாமென்றும் மணம் யாராவது நடத்தலாமென்றும்,மணம்முடிக்கப்பெற்ருேராவது, உறவினராவது,நண்பராவது தக்காரெனவும் வரையறுத்து விடவேண்டும்.

முடிந்த மணத்தை மணச்சடங்குகள் சரிவர நடைபெருத ஒரு காரணத்திற்காக, சரியான முறையில் மணமுடிய வில்லையென்று கருதுதல்கூடாது.

**பதிவு மணம்**

மணம் செய்துகொள்ளப்போகும் மக்கள் பிறந்த இடத்திற்கு அருகிலிருந்தால் பெற்ருேர்களிடமாவது மற்ற உறவினரிடமாவது சம்மதம் வேண்டியதைப் பெறமுடியும்.

**மணமகளுக்குப் பெற்றோர் பணம்**

மணமகனது உறவினரிடம் மணமகளுக்காகக் கொடுக்கப்படும் சொத்தும் பணமும் மணமகளது செலவுக்காக என அறுதியிட்டுவைத்ததாகும். ஆனல் மணமகன் தன்பெயருக்கு அந்தச்சொத்தையோ பணத்தையோமாற்றிக் கொடுக்கச் செய்துகொண்டால் அது மணமகளது சொந்தச்செலவுக்காக எனஅறுதியிட்டுக் கூறமுடியாது. அதனல் நேரிடும் தடையை எப்படித் தடுப்பது.

**மணவிலக்கு**

மணவிலக்கு இந்துசட்டத்திற்குப் புதியதல்ல. எல்லா மக்களிடையில் இப்பழக்கம் பண்டைக்காலத்தில் இருந்துவந்தது. இப்போதும் சிலவிடங்களில்சிலமரபினர் கையாண்டு வருகின்றனர். இவைகள் எல்லாவற்றிலும் ஒரு மகன் ஒரு மனைவியைத்தான் கொள்ளவேண்டுமென்ற உறுதிப்பாடு ஏற்பட்டவுடன் மணவிலக்கு இன்றியமையாததாக ஆயது, மணவிலக்குச்சில குறிப்பிட்ட—வரையறுக்கப்பட்ட முக்கியமான காரணங்களுக்கு மட்டும் கையாளச் செய்தல் வேண்டும்.

தலைவன், தலைவியாது நீங்காத பிணியின்பொருட்டும், குட்டம் முதலிய கொடும் வியாதியின் நிமித்தமும் மணவிலக்குச் செய்வதற்குமுன் தலைவிக்கு தக்ககுடும்பச்செலவுக்கு வகை செய்தல் வேண்டும்.

**இளைஞரும் அவர்களைக் காப்பவரும்.**

இப்போதும் உயர்நீதிமன்றத்திற்கு இளைஞர்களைக்காக்க பொறுப்பான ஒருவரையேற்படுத்த உரிமையிருக்கிறது. இதனையே வெளியூர்களிலுள்ள நீதிமன்றங்களும் வழங்குவதில் தவறில்லை. பத்திரங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட காப்பாளரும், சொத்தைப் பரிபாலித்துவர ஏற்படுத்தப்பட்டவர்களும் உத்தரவுபெற்றுச் சொத்தின்மீது கடன் முதலியன வாங்க உரிமை வழங்கலாம்.

**மக்களைத்தழுவுதல்.**

மக்களைத்தழுவிக்கொள்ளும் பழக்கம் திராவிடர்களுக்குள்ளேயிருந்து வந்திருக்கிறது, ஆனல் இது பார்வைக்கு ஆரிய முறையாகக்காணப்பட்டபோதிலும் மக்களைத்தழுவிக்கொள்ளும் பழக்கம் திராவிடர்களுக்கு அவர்களது தலைவழி தவருதிருக்கவேண்டுமென்ற ஒருகாரணம் கொண்டதேஅல்லாமல் ஆரியமுறையைப்போலச் சமயசம்பந்தமும் சுருதி முதலிய சாத்திரத்தில்கூறிய சடங்கு முறைகளைக்கொண்டதும் அல்லவாகும்: ஆங்கில அரசியலாரால்ஏற்படுத்தியமன்றத்தில் திராவிடர்களை உள்ளிட்ட எல்லோருக்கும் சட்டம் வகுக்கையில் ஆரிய முறையையே மற்றவைகளுக்கு வகுத்த மாதிரி இந்த மக்களைத் தழுவிக்கொள்ளும்முறையிலும் அனேக மக்களுக்குப் பொருத்தமில்லாதவகையில் சட்டமாக எல்லோருக்கும்செய்தனர்.

கொழும்பிலுள்ள தமிழர்கள் ஆரியர்கள் குடியேறியதற்கு முன்னரும் ஸ்மிருதியும்சட்டமும்எழுதப்படுவதற்கு முன்னரும் மக்களைத்தழுவிக்கொள்ளும் முறையையேகையாண்டுவந்திருக்கின்றனர் மேலும்பிள்ளைகளைத் தழுவிக்கொள்ளுதலுக்கு முக்கியமானசடங்குதமிழர்களுக்குள்இருந்துவந்தது.''மஞ்சள் தண்ணீர்குடிக்கிறது'' குழந்தையின் பெற்றோரும் தழுவிக்கொள்பவர்களது நெருங்கிய உறவினரும் மஞ்சள்கலந்த நீரை ஒரு கோப்பையில்வைத்து அதற்குள் அவர்கள் கைவிரல்களைவிட்டுப் பின்னர் அந்நீரைப் பருகுவர். இதிலிருந்து தழுவிக்கொள்ளும்முறை பண்டைத் திராவிடாது முறையென்பது விளங்கும். இந்த முறை இன்னும் நடைமுறையிலிருந்து வருகிறது தமிழருக்குள் தென்னிந்தியாவில்.

கொடுப்பதும் வாங்குவதுமென்பதும் தேவையில்லை, ஏனென்ருல் அனதைக் குழந்தைகளையும்தழுவிக்கொள்ளத்தடை வேண்டியதில்லையாதலாலே,' விதவைக் குழந்தையைத் தழுவிக்கொள்வதுபுதிதல்ல.கொழும்பில்வசிக்கும் தமிழருக்கும்தலைவனே தலைவியோ அல்லது இருவரும் சேர்ந்தோ குழந்தைகளைத் தழுவிக்கொள்ளும்பழக்கம்இருந்துவருகிறது.

பெண்குழந்தைகளைத்தழுவிக்கொள்ளுவதில் தடையிருக்கநேர்மையில்லை, ஏனென்ருல் இதுபோது ஆணையும் பெண்ணையும் சமமாகப்பாவிக்கவேண்டுமென்றஉணர்ச்சி மேலிட்டுவரும்போது ''ஆண்'' என்ற சொல்லைநீக்கி அதற்குப் பதிலாக, ''மகன், மகன் அல்லது மகள்'' என்ற சொற்களைச்சேர்க்கவேண்டும்.

## பேசாதது!

5-ம் பக்கத் தொடர்ச்சி.

மானல், இனிக்கட்சியிலேசேர்ந்து தீவிரமாகவேலைசெய்யுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொண்டு, அண்ணமலையார் துணைபெற்ற குமாரராஜாவும், முருகன் அருள் பெற்ற சர். பி. டி. இராஜனும், கலைமகள் கடாட்சம்பெற்ற சர், சண்முகமும், மற்றும்செல்வமும் சீரும்பெற்ற சீமான்களும், இங்கேவிஜயம்செய்ததற்காக வந்தனம்கூறுகிறேன்.

—————:(o):—————

## சிங்கத்தின் பங்கம்!

10ம் பக்கத் தொடர்ச்சி.

டிகளோ! சுயமரியாதக்காரர்கள் ஏற்றுக் கொண்டனர், செப்பனிடும் திருப்பணியை! பெரியார் தலைவரானர், பழைய பெருச்சாளிகளால், செப்பனிடப்பட்ட கட்சியிலே செய்துமுடிக்கக்கூடிய காரியம்எதும்இல்லை. எனவே பழையபெருச்சாளிகள், தரையிலே வளைதோண்டிக் கொண்டு, அந்தவழியாக மீண்டும்கட்சிக்குள்புகுந்து, உண்டு கொழுக்க விரும்புகின்றன. நீரோ, அந்தப் பெருச்சாளிகளின் போக்கின் நோக்கத்தைஅறியாது இளித்தவாயராகி, ஆஹா! இவர்களுக்குத் தான் என்ன ஆழ்ந்தகட்சிப்பற்று! கட்சிக்குள் கலந்துவேலை செய்ய இவர்களுக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறது! எவ்வளவு கஷ்டப்பட்டுக் குழி தோண்டுகிருர்கள் இந்தக் குணவான்கள்! என்று கூறிப் பூரிக்கிறீர்.

கேசரியாரே! அந்தக்காலத்திலே ஆண்மையுடன், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களென்போர்களை நீர் கண்டித்து எழுதியபோது, அதே தலைவர்கள் என்போரின் ஆதரவிலே நடைபெற்ற ''விடுதலையிலே'' நான் உமது நர்த்தனத்தின்கருத்துக்களை ஆதரித்து இருக்கிறேன், ஒன்றிரு சத்தற்றதகவல்களைத்தவிர.

''ஜஸ்டிஸ் கட்சி உருப்படுமா? என்ற பேனு நர்த்தனத்தின் உண்மைக் கருத்துகளை அன்பர் பரதன் உணர்ந்து கொண்டதுபற்றிச்சந்தோஷப்படுகிறேன். இது ஜஸ்டிஸ் கட்சிக்கு நல்லவிலை உயர்ந்த டானிக்தான். பலஉண்மைகளை —யோசனைகளைத்தமதுகட்டுரையில் கண்டேன்' என்று நண்பர் பரதன் ஒப்புக்கொண்டிருப்பது எனக்குப் பரம திருப்தி.'' என்று நீர் பாராட்டியுமிருக்கிறீர். நான், உண்மையிலேயே, கட்சியின் அமைப்பு, தலைவர்களென் போரின் இயல்பு என்பவைகளைத் தெரிந்துதிகைத்தது, அந்தச் சமயத்திலேதான், ஆனல் அந்தத்திகைப்பு எனக்குக் கட்சியிடம் வெறுப்பைக்கிளப்பவில்லை, மாருக எனக்குக் கட்சியிடம் பற்று வளர்ந்தது. வளர்ந்ததன்பயனக, உமது உரை வழி சென்று, கட்சி உருப்பட வழி, அதை உருக்குலைத்துவரும் உல்லாசச்சீமான்களின் பிடியிலிருந்து அதனை விடுவித்து, உழைக்கக்கூடிய, ஊரார் முன் நின்று உறுதியுடன் கட்சியின் கொள்கைகளை எடுத்துக்கூறி உணர்ச்சி யூட்டக்கூடிய எளிய வாழ்க்கையிலே இருந்துகொண்டு என்றும், எங்கும் கட்சிப்பணி தவிர வேறு ஏதும் செய்யவேண்டிய சுபாவத்

(6-ம் பக்கம் பார்க்க.)

# கிணற்றுத்தவளைகளுக்கு!

இந்துசட்டத்திலே, பெண்களுக்குச் சில உரிமைகள் கிடைக்கும்விதமாகத் திருத்தங்கள்செய்ய, ஒருமுயற்சி நடைபெறுகிறது. இதனைச்சங்கராச்சாரி முதற்கொண்டுசனுதனிவரை எதிர்க்கிறதுபோதாதென்று, இப்போதுசிலஇடங்களிலே, பெண்களே எதிர்ப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன. வைதிகத்தால் ஏற்படும் வக்கிரபுத்தி எப்படிஇருக்கும்என்பதற்கு இஃது எடுத்துக்காட்டு! பெண்களுக்குச் சொத்துரிமை, சுதந்திரவாழ்வு முதலிய நற்பயன்கிடைக்கும்படிசெய்ய நடத்தப்படும் நற்காரியத்துக்கு நாரிமணிகளே எதிர்ப்புக்கிளப்புவது விபரீதமல்லவா! இந்த விபரீதபுத்தியினரும் தெளிவுபெறக்கூடிய விதத்திலே, பெண்உரிமைபற்றியும், இந்துசட்டதிருத்தத்தின் அவசியத்தைப்பற்றியும், அறிஞர் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் "சக்தி" இதழிலே தீட்டியுள்ள அரியகட்டுரையின் சுவையுள்ளபகுதியை இங்கேவெளியிட்டிருக்கிறோம்:—

இந்தப் பிரச்னையை விருப்பு வெறுப்பற்ற பொது மனோபாவத்தோடு நாமே சிறிது ஆராய்வோம். முதலில், மனைவி, பெண் இவர்கள் என்னென்ன காரணங்களால் சொத்துக்குஉரியவர்களாக இருக்கிறார்கள் என்று கவனிக்கலாம். நியாயமாய்ப் புருஷனின் சொத்தில் மனைவிக்கும் சரிபாதி உரிமைஉண்டு. ஏனெனில், புருஷன் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தை மனைவிதான் வரவுக்குத் தகுந்தபடிசெலவு செய்து அவசியமான தேவைகளை நிறைவேற்றிவிட்டு, கையிருப்பாக ஓரளவுதொகையைச் சேமித்து வைக்கிறாள். ஆகையால், பணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகச்சேர்த்து வைத்து, முடிவாகச் சொத்தைஉருவாக்கும் முழுபொறுப்பும் அவளுடையதாகிறதல்லவா? புருஷனும் மனைவியும் தங்கள் தங்களுக்குரியகடமைகளைப்புரிகிறார்கள். மனைவி குடும்பகாரியங்களை முறையாகவும் ஒழுங்காகவும் கவனிப்பதிலே தன் வாழ்நாளைக்கழிக்கிறாள். குறிப்பிட்ட காலம்தான், புருஷனுக்குவேலைநேரமாகும். மனைவிக்கோநாளைக்குஇருபத்துநாலுமணி நேரமும் வேலைநேரம் என்று சொல்வதுமிகையாகாது. வீடு வாசல், மாடு கன்று, குழந்தைகள் அனைத்தையும் பேணிச்சீர்படுத்தும் பொறுப்பு அவளுடையது. தன் கணவனுக்கும் குழந்தைகளுக்கும்தகுந்த உணவளித்துக்காக்கும் சிறந்த டாக்டராகவும் நர்ஸாகவும் வேலையாளாகவும் குடும்பத்தில் விளங்கும் பெரிய பொறுப்பு மனைவியுடையதல்லவா? ஆகவே, ஒருகுடும்பத்தில்சேர்த்து வைக்கப்பட்ட பணம் அல்லது சொத்துக்குப் பெரும்பாலும் காரணமாய் இருப்பவள் மனைவிஎன்பது தெளிவாகிறது. சொத்துச்சேமிப்பதற்கு முக்கிய காரணமாய்இருந்த அவளுக்கு, அவள் கணவன் இறந்தபிறகு, அந்தச் சொத்தில் பாதியையாவது கொடுக்கவேண்டுமென்பதை, நேர்மையும்நல்லறிவும்உள்ள எவராவது மறுக்கமுடியுமா? புருஷன் இறந்தபின், தேஷ்முக் சட்டப்படி, அவனுடைய விதவை மனைவிக்கும் சொத்துரிமை இருப்பதைஇங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். இது மிகவும்நியாயமான சட்டமாகும்.

இனி, பெற்றோர்சம்பாதித்துவைத்த சொத்து. பிள்ளைகளைப்போலவே பெண்களுக்கும் எவ்வாறுஉரியதாகும் என்பதைப்பார்ப்போம். பெற்றோர்களுக்கு, பிள்ளைகளும் பெண்களும் சமமானவர்களே. பிள்ளைகளைவிடப் பெண்களையே அதிகச் செல்வமாகச் சிலபெற்றோர்கள் வளர்ப்பது கூடக்கவனிக்கத்தக்கது. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும்எவ்வளவு உரிமையும் சம்பந்தமும் உண்டோ அதேஅளவு உரிமையும் சம்பந்தமும், பெற்றோர்களுக்கும் பெண்களுக்கும் உண்டுஎன்பதை எவரும் மறுக்கமுடியாது. அப்படியிருக்க, பெண்ணாய்ப் பிறந்த ஒரு காரணத்தால்தானா, பெற்றோர்சொத்தின் உரிமையைப் பெண்கள் இழக்கவேண்டும்? இது என்ன நியாயம்! பெற்றோர்சொத்தில் பிள்ளைகளுக்குப்போலவே பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதே நியாயமாகும், பிள்ளைகளைப்போல் பெண்களுக்கும் சமபாகம் அளிக்காவிட்டாலும், அதில்பாதியாவது அளிக்கக்கூடாதா? இதை எந்த அறிவாளியும் மறுக்கமுடியாது; பெண்களுக்குச் சொத்துச்சுதந்தர உரிமைகள் இல்லாமையால்தான், வரதட்சணைத் தகராறுகள் அதிகமாகிவிட்டன. வரதட்சணைக் கொடுமைக்கு எத்தனை யுவதிகள் பலியாகிவருகிறார்கள் என்பதை நினைத்தாலே பயங்கரமாயிருக்கிறது.

சொத்துரிமையில்லாத குறையினால் தான், பெற்றோர் இறந்தபின் மணமாகாதபெண்ணைக் குடும்பத்துக்கு ஒரு பாரமாக, அவள் சகோதரன் [illegible] விடுகிறான். அதன்மேல் அவள் கல்யாண முடிக்கொண்டு, ஆய்ந்தோய்ந்து பாராமல் அவளை எங்கேயாவது தள்ளிவிடுவதிலேயே முனைந்திருக்கிறான். அதனால், அவள் வாழ்க்கையே பாழாகிறது. மணமாகாத தாய்மையும் சிசுஹத்தியும் சொத்துரிமை இல்லாதகாரணத்தால்தான் பெருகுகின்றன. பெண்களுக்குச் சொத்துரிமை இருக்குமானால், இத்தகையகேடுகள்பெரிதும் மறைந்துவிடுவது நிச்சயம்.

இளம் விதவைகள்தங்களுக்குச் சொத்துரிமையில்லாத முறையால்படும் வேதனைக்கு, அளவேயில்லை. பிள்ளையில்லாவிட்டால். புருஷன்இறந்ததும் சொத்தை அவள்புருஷனின் பங்காளிகள் எடுத்துக் கொண்டுவிடுகிறார்கள். அவள் சகலசுகத்தையும் உரிமைகளையும்இழந்து, அவர்களுக்கு அடிமையாகி அவஸ்தைபடநேர்கிறது. புருஷனின்சொத்தை அவனுடைய சொந்தமனைவி அனுபவிக்கமுடியவில்லை! என்ன அநியாயம்! அவள்தன் புருஷனின் வீட்டைவிட்டு அகன்று, தன் பெற்றோர்களிடம்போய்த் தஞ்சமடையவும்நேர்கிறது. அங்கேயும் அவள் நிர்க்கதியான ஓர் அடிமையாகத்தான்—அண்ணன் மனைவியருக்கு வேலைக்காரியாகத்தான்—உழைக்கவேண்டியிருக்கிறது. என்னகொடுமை! அவளுக்கும் தகப்பனின் சொத்தில் பங்கிருக்குமானால், புருஷனின் சொத்தில் உரிமை இருக்குமானால், தன் சகோதரனைப்போலவே, அவனுக்குச் சமத்துவமாகவே, சர்வசுகத்தோடும் சுதந்தரத்தோடும் அவளும் வாழ முடியுமல்லவா? முஸ்லீம்களின் சட்டம், பெண் சொத்துரிமைக்கு இடங்கொடுக்கிறது. அது மிகவும் மெச்சத்தக்கதாகும்.

சமீபத்தில் ராவ் கமிட்டியார் இந்த விஷயமாய் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சி பெரிதும் பாராட்டத் தக்கது. பெண்களின் உரிமையையும் நலத்தையும் பாதுகாப்பதற்குரிய பல அம்சங்கள், அவர்களின் சிபார்சில் அடங்கியிருக்கின்றன. சிபார்சின் எல்லா அம்சங்களும் திருப்திகரமானவையே. ஸ்திரீதன விஷயத்தில் ராவ் கமிட்டியாரின் சிபார்சு விசேஷமாய்ப் போற்றத்தக்கதாகும். விவாகஉரிமை விஷயமாக அவர்கள் செய்திருக்கும் சிபார்சும் மிகவும் சிறந்ததே.

ஒரு புருஷனுக்கு ஒரே மனைவி என்ற கொள்கை மாத்திரம் கண்டிப்பாய் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்குமானால், நமதுநாட்டில் பெண்கள் வாழ்வு பல வழிகளிலும் சிறந்திருக்கும், திருமண விஷயத்தில் பெண்களுக்குள்ள பலகண்மூடிக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்தால்தான், நாம் முன்னேற முடியும். விவாகத்துக்குப் பெண்களின் முழுச்சம்மதத்தையும்

(10-ம் பக்கம் பார்க்க)

## கிணற்றுத்தவளைகளுக்கு!

9-ம் பக்கத் தொடர்ச்சி.

பெற்றேயாகவேண்டும். பெண்களின் பூரண சம்மதத்தையும் பெருமல், அவர்களைக் கல்யாணம் செய்து கொடுப்பது அவர்களது உரிமையைப் பறித்து அடிமைகளாக்கி அவர்களது வாழ்க்கையையே நாசம் செய்வதற்கொப்பானபெருங் கொடுமையாகும். விவாகத்திலும் விவாகரத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமத்துவம் வேண்டும். ஒருவன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் கல்யாணம் செய்துகொள்ளலாமாம், ஆனால், பெண்ணோ, தன் புருஷன் முறையற்ற விதத்தில் அவளைச் சித்திரவதை செய்தாலும், எவ்வளவுதான் பொருத்தமற்றவனாயிருந்தாலும், மிருகத்தனமாக நடந்துகொண்டாலும், [illegible] கொடிய வியாதியால் வருந்தி நெருங்க முடியாமல் இருந்தாலும, அவனை விட்டுப் பிரியாமல் அவனோடு கூடி இருந்து எல்லாக் கொடுமைகளையும் சகித்துக்கொண்டுவாழவேண்டுமாம்! இது என்ன நீதி? புருஷன் விரும்பினுல் நினைத்ததற்கெல்லாம் மனைவியைப் புறக்கணித்து விடலாம்; விலக்கி வைத்துவிடலாம். மனைவிமட்டும் அடிமைப்பட்டு அல்லலுறவேண்டும். இது என்ன கொடுமை! இந்தப் பட்சபாதமான நிலை அடியோடு ஒழியவேண்டும். ஆண்கள் தங்கள் மனைவியருக்குப் பைத்தியம் பிடித்திருந்தாலோ அல்லது தீராத கொடிய வியாதியில் சிக்கியிருந்தாலோ அல்லது இதுபோல் ஒப்புக்கொள்ளக்கூடிய சில காரணங்களாலோ அல்லாமல் வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் மற்றொருத்தியை மணக்கவோ சம்பந்தம் கொள்ளவோ இடங்கொடுக்கலாகாது. ஒரு மனைவி யிருக்கப் புருஷன் வேறொருத்தியை மணப்பதாலும் புருஷனின் கொடுமையை முன்னிட்டு விவாகரத்துச் செய்துகொள்ள முடியாததாலும், எத்தனையோ இளம்பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் கதற நேர்கிறது. அனாதைப் பெண்கள் சம்ரட்சணாலயங்களுக்குச் சென்று பார்த்தால், இந்தக் கொடுமைகளான இளமங்கையர் பலரைக் காணலாம். ஆகவே, 'ஏக பத்னி—ஏக பதி' விரதமும், நியாயமான முறையில் விவாகரத்தும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

பிள்ளைகளைத் 'தத்து' எடுத்துக்கொள்ளும் விஷயத்திலும், போஷகராக இருக்கும் விஷயத்திலும், ஆணைப்போலவே பெண்ணுக்கும் சமத்துவம் அளிக்க வேண்டியது அவசியம். தாய்மார்களின் சம்மதமில்லாமல் குழந்தைகளைச் சுவீகாரம் கொடுப்பது அல்லது பெறுவது நேர்மையற்ற பட்சபாதச் செயலாகும். குழந்தைகளைப் பராமரிக்கும் விஷயத்தில் தகப்பனைவிடப் பதின்மடங்கு முக்கியமானவள் தாய். 'உடல் பொருள் ஆவி அனைத்தையும்தங்கள் குழந்தைகளின்க்ஷேமத்துக்காகத் தத்தம் செய்கிறார்கள்தாய்மார்கள். குழந்தைகளுக்காகவே வாழும் தாய்மார்களின் சம்மதத்தைப்பெருமல், தகப்பனின் சம்மதத்தால் மட்டும் சுவீகாரம் செய்துக்கொள்ளவோகொடுக்கவோ கூடாது. அது மன்னிக்கமுடியாத குற்றமாகும்.

பெண்கள் சீர்திருத்த விஷயமாகக் கூறும்போது, ஒன்றை அவசியம் குறிப்பிடவேண்டியிருக்கிறது. அதாவது, நேற்றுவரையில் யார் என்றுகூடத்தெரியாது ஒரு சில ஆண்மக்களின் அடிமைத்தனத்தனத்திலும் அறியாமையிலும் மூழ்கிக்கிடப்பவர்களும் வீட்டைத் தவிர வெளியுலகை எட்டிக்கூடப் பார்க்காதவர்களுமான சில கிணற்றுத் தவளைப் பெண்கள், இப்போது வரிந்துகட்டிக்கொண்டு பெண்ணுரிமையை எதிர்க்க வந்திருப்பதுதான் ஆச்சரியமாய் இருக்கிறது. பெண்களுக்குச் சுதந்தரமும் சமத்துவமும் வேண்டுமென வாதித்தால், அதைப் பெண்களே எதிர்ப்பது வெட்கக்கேடாரும். ஆபிரகாம் லிங்கன் நீக்ரோவரின் அடிமைத்தனத்தை அகற்ற வேண்டுமென்று கிளர்ச்சி செய்தபோது, ஒன்றுமறியாத நீக்ரோவர்களிலேயே சிலர் அந்தக்கொள்கையை எதிர்க்க முன்வந்ததுபோல்தான் இருக்கிறது, இவர்களின் விபரீத புத்தியும்!

—————:(o):—————

## சிங்கத்தின் பங்கம்!

(4ம் பக்கத் தொடர்ச்சி)

"வாஸ்தவத்தில் இப்போது அந்தக்கட்சிக்குத் தலைவர்கள் என்று யார் கருதப்படுகிறார்களோ, அவர்களிடத்தில் நான் வைத்திருந்த நம்பிக்கையின் பிடிப்புக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு வருகிறது. ஏனென்றால் ஒரே குடும்பத்துப் பிள்ளைகள் மாதிரி இருக்கவேண்டிய அவர்கள், ஒருவருக்கொருவர் அசுசி கூறிக் காலங் கழிக்கின்றனர். இந்த ஒற்றுமைக் குறைவால் கட்சி வளர்ச்சியில்அவர்களுக்குக் கவனமிருப்பதாகவே காணேம். கட்சிக்காக அவர்கள் செலுத்துகிறதாகச் சொல்லப்படும் அக்கரை ரொம்பப்போதாது. சிநேகர்களுக்கும் உறவினர்களுக்கும் எவ்வளவு பரிவு காட்டுகிறார்களோ அந்த அளவில் பாதிகூடக்கட்சி மனிதர்களுக்குக் காட்டுவதில்லை."

பக்கத்துக் கையைப் பார்த்துச்சாப்பிடு" என்று சர்வ சாதாரணமாகயாரும் சொல்வதுண்டு. அந்தமாதிரி பக்கத்துக் கட்சியார் செய்கிற காரியங்களை—நடவடிக்கைகளைப்—பார்த்தாவது ஜஸ்டிஸ் தலைவர்கள் நடப்பார்களென்று எதிர்பார்த்திருந்தேன். எதிர்க்கட்சியார் திட்டுகிற திட்டுக்குப் பிறகாவது ரோஷம் வரும் என்று எண்ணியிருந்தேன் ஆனால் முச்சந்தியில் இருக்கும் கல்லுப் பிள்ளையாரைப்போல, காற்றும் மழையும் வெயிலும் என்னை என்ன செய்யும்? வெயிலால் உடம்பு உஷ்ணப்பட்டால் மழை அதைத்தானே தணித்துவிடும்; மழையினால் ஏற்படும் ஈரத்தைக்காற்று உலர்த்திவிடும்; காற்றால் உடம்பில் ஒட்டும்ரோட்டுப் புழுதியை மழை கழுவி விட்டு விடும். ஆகவே காற்றும் மழையும் வெயிலும் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்று சொல்வதுபோலவே, ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களின் போக்கும் இருப்பதாக எனக்குப்பட்டது.

காங்கிரஸ் கட்சியாரின் புளுகுப் பிரசாரமோ, சத்தியமூர்த்தியின் பித்தலாட்டப் பேச்சோ, குல்லுகபட்டர்களின் போலி வேஷமோ தங்களைத் துளிகூட அசைத்துவிடாது என்று இந்த ஜஸ்டிஸ் கட்சியார் நினைத்து நடப்பதாகவேஅவர்களின் 'அசால்ட்' போக்கிலிருந்துயூகிக்க வேண்டியதிருக்கிறது. புதது—ரோஷம் வெட்கம்—மானம், இன்று வரும் நாளை வரும்என்றுஎதிர்பார்த்தேன். நானும்ஜாடைமாடையாகச்சொல்லியும் பார்த்தேன். கொஞ்சமும் அசையக்காணேம். அதற்குமேல் இடித்துச் சொல்லிப்பார்ப்போமே என்கிறநினைப்பு எனக்குஏற்பட்டது. அதேமூச்சில் "உருப்படுமா"என்ற விளிப்புடன் எனது பேனவை ஓட்டினேன். இவ்வளவு துடிப்பு எனக்கு ஏற்படுவதற்குக் காரணம் என்ன தெரியுமா? காற்றும் மழையும் கலந்தடித்தும் பெரும் பிரளயம் உண்டாகி, முச்சந்திப் பிள்ளையாரை வேரோடு பிடுங்கி அடித்துக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது என்கிற பயம் எனக்கு."

கேசரி அண்ணவே! அந்தப்பயம், அனைவருக்கும் ஏற்பட்டது. பெரியாருக்கு அந்தபயம்அதிகமாக ஏற்பட்டது. ஆகவேதான், பார்ப்பனரல்லாதாரின் வாழ்வு வளமுள்ளதாக வேண்டும் என்ற நோக்கத்துடன் நிறுவப்பட்ட அருமையானகட்சி, சுயநலச் சுகவிரும்பிகளின் சோம்பற்கூடமாகி விடக்கூடாது என்று கருதிச், சுயமரியாதைக்காரர்களிலே சிலர் வீசிய சுடுசொல்லையும், தேசீயவாதிகளென்போர் கக்கிய பழிச்சொல்லையும் ஏற்றுக்கொண்டு, நாடுசுற்றிக் கட்சிக்குப் பணி புரிந்தார். நீர் அன்று "இந்தக்கோயிலின் இப்போதுள்ள தர்மகர்த்தாக்கள் யோக்கியப் பொறுப்புடன் நடக்காவிட்டால், அவர்களை அடியோடு ஒழித்துவிட்டு வேறு டிரஸ்டிகள் ஏற்படுத்திப்பூஜா கைங்கரியங்கள் ஒழுங்காக நடப்பதற்கு வழி செய்துவிடவேண்டுமென்பதுதான் என்போன்ற பக்தகோடிகளின் பரமானந்தஇச்சை. இத்தகைய இச்சையின் தூண்டுதலால்தான் "ஜஸ்டிஸ் கட்சி உருப்படுமா?" என்று எனது பேனநர்த்தனம் ஆடிற்று" என்று எழுதினீர். உமது பேன ஆடிற்று, தீவிரவாதிகளின் உள்ளம் தேடிற்று புதிய டிரஸ்

(8ம் பக்கம் பார்க்க)

## சைவத்திற்குச் சப்பைக்கட்டு.

2-ம் பக்கத் தொடர்ச்சி.

யன்றோ, ஆறுமுகநாவலரையும் அருட்பெரும்வள்ளலாரையும் ஒருவருக்கொருவர் அழுக்காறுகொள்ளும்படிசெய்தது. இவர்களின் இச்செயல், "மணற்சோற்றில் கல்ஆராய்வது" போன்றதென்றே மதியுடையோர் கருதுவர். எப்படியென்றால், "சைவசமயாசிரியர் நால்வரால் பாடப்பெற்ற தேவார திருவாசகங்களினாலன்றோ சிவப்பெருந்தன்மைக்குச் சிறப்பும் செல்வாக்கும் உண்டாயிற்று; அதைச்சிறுமைப்படுத்துகின்றனவே இராமலிங்கரின் சிறுமதிச் சில்லறைப்பாடல்கள்" என்ற சீற்றம் நாவலருக்கும்; நால்வர்பாடிய நன்மொழிகளை ஆதாரமாகக் கொண்டே நான் அருட்பாவைப்பாடி இன்னும் மிகுதியான போற்றுதலுக்குச் சிவனை ஆளாக்கினேன், இதனை அறியவில்லையே ஆறுமுகம்" என்ற ஆத்திரமை அருட்பெரும் வள்ளலாருக்கும் ஏற்பட்டது. ஆனால், சைவர்களனைவரும் ஓரளவுக்குச்சீர்திருத்தம் பேசுபவர்களாகத் தம்மைக்காட்டிக்கொள்வோரால், தேவார திருவாசகஅருட்பாக்கள்ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. இவை, சைவத்திற்கு இடர் விளைவிப்பன என்பது அவர்கள்நினைப்பு. அண்மையில், சைவத்தில் சீர்திருத்தம் காணுபவராகத் தம்மைக்கருதிக்கொள்ளும் ஒருவர், தம்மால்நடத்தப்படும்வாரத்தாளில், "சைவத்துட் புராணம்புகுந்து மக்களுக்குப் பெரும்குழப்பத்தைக்காலக்கிரமத்தில் உண்டாக்கிவிட்டது. புராணமே சைவத்தின் முக்கியஅங்கம் என்றும் பலர் கருதினர்; பேசினர்; நடைமுறையில்வைத்து இடருற்றனர்" என்று எழுதியுள்ளார். இதனால், சைவம், புராணத்தொடர்பற்றதாய் இருந்தால் அதன் பெருமைக்கு அளவுகோலே இருக்கமுடியாதென்று இவர் கருதுவதாகத்தெரிகிறது. புராணம் அல்லது புராணிகத்தின் தொடர்பில்லாத சைவம் எங்கிருக்கிறது-எங்கிருந்தது—எப்போதிருந்தது—எதன் தொடர்போடுஇருந்தது என்பனவற்றை அவர் எடுத்துக்காட்டினால் நாமும்அதன் உண்மையை அறிந்துகொள்ள ஏதுவாய் இருக்கும். புராணம் இல்லையேல்-சைவம் இல்லை;சைவம்இல்லையேல்புராணம்இல்லை என்ற நிலையிலேயே சைவத்தின்தொடர்பு புராணங்களோடு பிணைக்கப்பட்டிருக்கிறது, புராணமோ அல்லது புராணிகமோ அறவே எடுக்கப்பட்டுஅதாவது ஒழிக்கப்பட்டுவிட்டால், சைவம்எனஒன்றுஇருக்க முடியுமா என்பதை அவரேஓர்ந்து உணர்ந்து பார்ப்பாரானால், நாம்கூறும் உண்மையைமறுக்க மாட்டார். எப்படியென்றால், "சைவம்" என்பதற்குப்பொருள் சிவத்தொடர்புடையதுஎன்பதேயாகும். சிவன், புராணத்தொடர்பற்றுத்தனியாகவோ அல்லது வேறு யாதேனும் தொடர்புகொண்டோ இருக்க முடியாத நிலையிலேயே சிவத்தன்மை விளக்கப்பட்டுள்ளது.

> "அவன் அவள் அது வெனும்
> அவை மூவினமையில்
> தோற்றிய திதியே ஒடுங்கி
> மலத்துளதாம்
> அந்தம் ஆதி என்மனார் புலவர்"

என்ற சிவஞான போத முதற் சூத்திரத்து முதற் செய்யுட் கருத்துப்படியும், சிவன் புராணத் தொடர்பற்றவனாய்இருக்கமுடியாது. சிவனுக்கு, உயிர்களை அழிப்பதும் ஆக்குவதுமாகிய தொழில்கள் உண்டென்பதே இப்பாடலின் கருத்தாகும். ஆக்கல் அழித்தல்ஆகியவேலைகளைச் செய்யும் சிவன் எவனோ, அவனைப்பற்றிய வரலாறுகளே, புராணங்களிலும் கூறப்பட்டுள்ளன. எனவே, சைவத்தின் முதல் நூலென்று சொல்லப்படும் சிவஞானபோதமே புராணத்தொடர்புடைய சிவத்தன்மைக்கு இலக்கணம் வகுத்து நிற்கும்போது, புராணத்தொடர்பற்ற சைவம் என ஒன்று எங்குளது? அதனுடைய தொழில் என்ன? என்பதை நம்மனோர்க்கு விளக்கிக்காட்டவேண்டாமா?

இனிச், சைவம் புராணத்தொடர்பற்றதாய் இருக்கவேண்டுமென்று கூறிய அவரே இன்னொன்றும் கூறுகிறார். அதாவது, சைவத்தின் உட்பொருள் (தத்துவம்) மிகஉயர்ந்ததாகும் என்பதை மறுப்பது எளிதன்று, சமயாசிரியர்கள் அதன் உண்மையை உணர்ந்து தாங்கள் நடந்து சைவத்தின் பெருமையைஉணர்த்தினர்" என்பதேயாகும். சைவசமயாசிரியர்கள் என்று சொல்லப்படும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கர் ஆகிய நால்வரும் தாங்கள் பாடிய தேவார திருவாசகங்கள் வாயிலாகவே சைவத்தின் பெருமையை உணர்த்தினர். இச்சொல்லப்பட்ட நால்வரும் சேர்ந்து சிவத்தன்மையை விளக்கிய பாடல்கள் சற்றேறக்குறைய 10, 26,000 பாடல்களாகும். இவற்றுள் செல்லரித்துப் போயின வென்ற செப்படி வித்தைக்குள் அகப்பட்ட பாடல்கள் போக எஞ்சிநிற்கும் பாடல்களில் ஒன்றாவது புராண இதிகாசங்களின் தொடர்பற்றதாக இருக்கிறதென்று எடுத்துக் காட்ட முடியுமா? தேவார திருவாசகங்களில் உள்ள ஒவ்வொரு பாடலும்புராண இதிகாசங்களில் வரும் கதைகளை ஆதாரமாக வைத்தே பாடப்பட்டுள்ளனவென்பதும், புராண இதிகாசங்கள் இல்லையேல் தேவார திருவாசகம்பாடியிருக்கவேமுடியாதென்பதும் அங்கைநெல்லிக்கனியென அறியக்கிடக்கின்றது. இந்த நிலையில், 'சைவசமயாசிரியர்கள் உணர்த்திய சைவத்துட் புராணம் புகுந்து மக்களுக்குப் பெருங்குழப்பத்தை உண்டாக்கி விட்டதென்று அவ்வாசிரிய நண்பர் கூறுவதில் யாதாயினும் பொருள் இருக்கமுடியுமா?

ஒருக்கால், சைவசமயாசிரியர்கள்நால்வருள் ஒருவரும், இவ்வாலாற்றில் பேசப்படுபவருமான ஞானசம்பந்தர்-உணர்த்திய சைவத்தையே அவ்வாசிரியர் குறிப்பிடுகிறார்போலும்! அதனாலேதான், "சமயாசிரியர்கள் அதன் உண்மை உணர்ந்து அதன்படி தாங்கள்நடந்துசைவத்தின்பெருமையை உணர்த்தினர் என்றும் குறிப்பிட்டார்போலும்! இவ்வாலாற்றில் பேசப்படும் சம்பந்தர் என்பார் சைவத்தை உணர்த்திய விந்தை எப்படிப்பட்டது? இச்சொல்லப்பட்ட சைவசமயக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துத் தங்களுக்கென வேறுதனியான கொள்கைகளையுடையவர்களாய் இருந்து,அறிவியக்கத்தை வளர்க்க அரும்பாடுபட்ட சமணப்பெரியார்களைக் கழுவில் ஏற்றியும், உயிரன்பு நெறியை உலகுக்குணர்த்திய புத்தர் பெருமக்களை மண்டையிலடித்தும் கொன்றொழித்ததன் வாயிலாகவன்றோ, சம்பந்தர் சைவத்தை இந்நாட்டவர்க்கு உணர்த்தினர். (சம்பந்தர், சமணர்களைக் கழுவில் ஏற்றிய வரலாறு பின்னால் இன்னும் விரிவாக எழுதப்படும்)

எனவே, இந்த வகையில் சைவத்தின் பெருமை உணர்த்தப்பட்டதென்றஅவர் கருதுவாரானால், அவர் உள்ளூர நினைத்திருக்கும் 'அன்பை அடிப்படையாகக் கொண்டதே சைவம்' என்பதற்கும், அன்பைக் கொலை செய்து ஆளைப்பலியிடும் சைவத்திற்கும் யாதாயினும் தொடர்பிருக்க முடியுமா என்பதை, "உண்மைச் சைவத்தில் உண்மையான பற்று ஏற்படவேண்டும்" என்றும், "சமயத்தில் சாதிபுகுந்து குழப்புவதுகொடுஞ்செயல்' என்றும் தம்முடைய தாளில் எழுதிய அவரே நன்கு எண்ணிப்பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பது எமது விருப்பம். நிற்க.

சைவத்திற்கும் அதன்தலைவனான சிவனுக்கும் கூறப்படும் இலக்கணங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடுடையனவாகவும், அறிவுக்குப் பொருந்தாதனவாகவும் இருந்ததால், அறிவுடையோர் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்த காரணமே சைவத்துக்குப் பல பிரிவுகளையும்,சிவனுக்குப் பல பெயர்களையும், சைவத்தை உணர்த்தவந்த சமயாசிரியர்களுக்குப் பல பெயர்களையும் உண்டாக்கிச் சைவத்தைமீண்டு நிலைநாட்ட முயற்சித்ததோடு, மக்களுக்கும் சைவத்தில் ஓர் மயக்கமான பற்றுதலும் ஏற்படும்படி செய்துவிட்டார்கள். இவ்வுண்மைகளைச் சைவத்தில் சீர்திருத்தம் காணமுயல்வோர் இன்னும் உணரவில்லையென்றே தெரிகிறது. ஆனால், காலம்இவற்றை அவர்களுக்கு உணர்த்தும் என்பதில்நாம் ஐயம்கொள்ளவில்லை.

---

### சேந்தமங்கலம்

28—12—44ல் தோழர் T.K. முத்துசாமி தலைமையில் ஒரு கூட்டம்கூடி டையூர் திராவிடர்கழகம்நிறுவப்பட்டுக்கழகக் குழுவினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### நாயகம் மறைவு-நாட்டின் அனுதாபம்.

**சேலம்.**

24—12—44ல் அம்மாப்பேட்டை பனகால் திராவிடர் கழகத்தின் ஆதரவில் தோழர் K. இராமசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் C. D. நாயகம் மறைவுபற்றி அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

28—12—44ல் ஷை கழகத்தின் சார்பாகத்தோழர் K. இராமசாமி தலைமையில் ஒருகூட்டம் கூடியபோது பல தோழர்கள் 'திராவிடரும் நம்கடமையும்' என்பதுபற்றி விரிவுரையாற்றினர்.

**கோவிற்பட்டி.**

19—12—44ல் இவ்வூர் திராவிடர் கழக நிர்வாகக்கமிட்டிக்கூட்டம் தோழர் S. P. துரைசாமி தலைமையில்கூடி தோழர் C. D. நாயகம் இயற்கை எய்தியதுபற்றி அனுதாபமும் பட்டம் பதவிப் பித்தர்களின் போக்கைக்கண்டித்தும்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பேராவூரணி.**

30—12—44ல் ஷை யூர் திராவிடர் கழகத்தின் ஆதரவில் தோழர் K. குழந்தைச்சாமி தலைமையில்கூடிய கூட்டத்தில் தோழர் C. D. நாயகம் மரணத்திற்கு ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தூத்துக்குடி.**

25—12—44ல் இவ்வூர் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன் தமிழர் சமதர்ம சங்க 5-வது ஆண்டுவிழா தோழர் A. அய்யாசாமி தலைமையில் நடந்தபோது தோழர் C. D. நாயகம் பிரிவுபற்றி ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**எட்டயபுரம்.**

26—12—44ல் இவ்வூர் திராவிடர் கழகத்தின் சார்பாகத் தோழர் M. S. சிவசாமி தலைமையில் பல தோழர்கள் "திராவிட நாட்டுப்பிரிவினை" என்பது பற்றிப்பேசியதுடன் தோழர் C. D. நாயகம் முடிவெய்தியதுபற்றித் தங்கள் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

**பம்பாய்.**

தோழர் C. D. நாயகம் அவர்களுடன் நெடுநாள் பழகியவரும் அவரது அன்பைப்பெற்றவருமான தாராவித்தோழர் S. பெரியசாமி, அன்னார் மறைந்தமை பற்றி மிகவருந்தியும், பிரிந்து கலங்கும் அவர் குடும்பத்தாருக்குத் தனது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறார்.

**முகவூர்.**

29—12—44ல் இவ்வூர் திராவிடர் கழகக்கூட்டம் தோழர் மா. கணபதி தலைமையில்கூடி இயற்கையெய்திய தோழர் C. D. நாயகம் குடும்பத்தினருக்குத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**புதுப்பேட்டை.**

17-12-44ல் இவ்வூர் திராவிடர்கழகத்தின் ஆதரவில் தோழர் கி: இரங்கநாதன் B.A., L.T., தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் C. D. நாயகம் அவர்கள் மறைவு பற்றி இரங்கியும் பெரியார் அவர்களைக் குறைகூறும் சில புல்லுருவிகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

17-12-44 இரவு தோழர் S. கோவிந்தசாமி தலைமையில் ஒரு கூட்டங் கூடி 3-2-45ல் ஷை யூரில் தென்னாற்காடு மாவட்டத்திராவிட மாணவ மாநாடுநடத்துவதென்றும் அதற்கு நிதி திரட்டச்செயற்குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

**சென்னை.**

17-12-44ல் இந்நகர் இளைஞர்கழகத்தின் ஆதரவில் ஒரு கூட்டங்கூடி தோழர் C. D. நாயகம் அவர்கள் இயற்கை யெய்தியதற்கு வருந்துவதாகவும்அவர்குடும்பத்தாருக்குத் தங்கள் அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

**காந்தை.**

20-12-44ல் ஷையூர் புலவர் கல்லூரிக் கழகத்தில் தோழர் P. R. மீனாட்சிசுந்தரம் M.A., தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் C. D. நாயகம் இழப்பைக் குறித்துத் தங்கள் வருத்தத்தைத்தெரிவித்துக்கொண்டனர்.

**காரைக்குடி.**

24-12-44ல் இவ்வூர் திராவிடர்கழகக் கூட்டம் ஆசிரியர் தோழர் முருகையா தலைமையில் நடந்தபோது தோழர் C. D. நாயகம் இறந்தமைபற்றி ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேறியது.

**குளித்தலை.**

23-12-44ல் ஷையூர் திராவிடர்கழகக் கூட்டம் தோழர் M. இரத்தினசபாபதி தலைமையில் கூடித் தோழர் C. D. நாயகம் காலமானதுபற்றித் தங்கள் அனுதாபத்தையும், P. பாலசுப்பிரமண்யம் கூட்டத்தாரின் போக்குபற்றி கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

### திராவிடர் கழக விழா.

**பெரியகுளம்.**

ஷையூர் மணிவாசக மன்றத்தார், 4-12-44ல் திராவிடப் புதுமலர்ச்சிநாடக சபையாரால் "போர்வாள்" என்னும் நாடகம் நடத்தியபோது, தோழர் M. R. ராதாவைப்பாராட்டி ஒரு வாழ்த்துத் தாளும், வெள்ளிக்கோப்பையும்பரிசளித்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்திராவிடர் கழக முதல்மாநாடு நடத்த 14-1-45ல் ஆலோசனைக்கூட்டம் கூடப்போவதால் எல்லாத்திராவிடத்தோழர்களையும் வரும்படி கழகஅமைச்சர்கள் அழைக்கின்றனர்.

**போத்தனூர்.**

19-12-44ல் இவ்வூரில் திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் தோழர் சனார்த்தனத்தால் திராவிடர் கழகம் திறக்கப்பட்டது.

**குறிஞ்சிப்பாடி**

29—12—44ல் நடந்த இவ்வூர் பஞ்சாயத்துபோர்ட் பிரசிடெண்ட் தேர்தலில் திராவிடர் கட்சி அபேட்சகர் தோழர் P. P. முத்தையா முதலியார் காங்கிரஸ்கட்சி அபேட்சகரைத்தோற்கடித்து வெற்றிபெற்றார்.

**துறையூர்**

24—12—44ல் ஷையூர் ஆதித்திராவிட வாலியர் கழகத்தின் 2-வது ஆண்டு விழா தோழர் து. மு. குமாரவேல் தலைமையில் சிறப்புடன் நடந்தது.

**ஆடுதுறை**

27—12—44ல் இவ்வூர் ஜின்னாஹ் இலவச வாசகசாலையின் முதலாண்டு நிறைவுவிழா திருச்சி (சமரசம்) ஆசிரியர் தோழர் S. M. சுல்தான்பக்தாதி தலைமையிலும், ஜின்னா பிறந்த தின விழா தோழர் ஆலிஜனாப், நா முகமது இப்ராகிம் தலைமையிலும் வெகுவிமரிசையாய் நடந்தது.


தந்தி:—"புறாமார்க்" திருச்சி.





Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.